www.tamilarangam.net

அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 24-09-1993

**உள்ளே.....**

கடந்த மாதம் 26ம் திகதி கிளாலிக் கடலேரியில் சிறீலங்கா கடற்படையின் 'வோட்டர் ஜெட்' அதிவேகப் படகுகள் இரண்டைச் சிதறடித்து வீரச் சாவடைந்த கடற்கரும்புலிகளான மேஜர் வரதன் (நிலவன்), கப்டன் மதன் ஆகியோரின் உருவப்படங்களும், கடந்த மாதம் 29 ம் திகதி பருத்தித்துறைக் கடற்பரப்பில் சிறீலங்காக் கடற் படையின் 'டோரா' பீரங்கிப் படகை மூழ்கடித்து வீரச்சாவடைந்த கடற்கரும்புலிகள் மேஜர் புகழரசன் (புவீந்திரன்), கப்டன் மணியரசன் ஆகியோருடைய உருவப்படங்களும் உள்ளே இணைக்கப்பட்டுள்ளன. ■

# நேர்மையுடன், சத்தியத்தின் அடிப்படையில் சமூகநீதி நிலைநாட்டப்பட்டாக வேண்டும்



தமிழீழ நீதித்துறையின் நீதியாளர், தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களின் முன் சத்தியப்பிரமாணம் செய்கிறார். நீதித்துறைப் பொறுப்பாளர் திரு. பரா அவர்களும் அருகில் காணப்படுகிறார்.

## நீதியாளர் சத்தியப்பிரமாண வைபவத்தில் தேசியத் தலைவர் பிரபாகரன்

**"தனிப்பட்ட உணர்வுகளுக்கும், பந்த பாச உறவுகளுக்கும் இடமளியாது, நேர்மையுடன் பிரச்சினைகளை அணுகி, சத்தியத்தின் அடிப்படையில் மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். இலட்சியப் போராளிகளான உங்களிடமிருந்து தமக்கு நீதியும் நியாயமும் கிடைக்குமென மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். எமது மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நீங்கள் நேர்மையுடனும் கண்ணியத்துடனும் செயற்பட்டு சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும்"**

இவ்வாறு தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் தமிழீழ நீதித்துறையின் நீதியாளர், சட்டவாளர் ஆகியோரின் சத்தியப்பிரமாண வைபவத்தில் உரையாற்றும்போது எடுத்துரைத்தார். தமிழீழச் சட்டக்கல்லூரியில் பயிற்சியை முடித்துக் கொண்ட நீதியாளர்களும் சட்டவாளர்களும் கடந்த மாதம் 20ம் திகதி தலைவர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

இந்த வைபவத்தில் தேசியத் தலைவர் கருத்துரை வழங்கும் போது மேலும் கூறியதாவது: "இன்றைய தினம் எமது இயக்கத்தின் போராட்ட வரலாற்றில் ஒரு முக்கிய தினமாகும். இன்றைய தினத்தில் தமிழீழ நீதித்துறைக்கு அத்திவாரமிடப்பட்ட ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாக இந்த சத்தியப்பிரமாண வைபவம் நடைபெற்றிருக்கிறது. முன்பு பஞ்சாயத்து முறையில் கிராமிய இணக்கசபைகளை நிறுவி, மக்களின் பிணக்குகளைத் தீர்த்துவைக்க எமது இயக்கம் முயன்றது. இன்று நீதித்துறையில் பயிற்சி பெற்ற போராளிகள் நீதியாளர்களாகவும், சட்டவாளர்களாகவும் உருவாக்கப்பட்டு செம்மையான முறையில் நீதி நிர்வாகத்துறை கட்டி எழுப்பப்படுகிறது. ஒரு சுதந்திரம் பெற்ற, இறைமையுள்ள நாட்டின் அரச நிர்வாக அலகுபோல எமது நீதித்துறை உருவாக்கப்படுகிறது. இது எமது போராட்டத்தின் பாரிய வளர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது.

நீங்கள் போராளிகளாக இருந்து நீதியாளர்களாக மாறியிருக்கிறீர்கள். எந்த இலட்சியப் பற்றுடன் இயக்கத்தில் இணைந்து செயற்பட்டீர்களோ அதேபோன்ற தியாக உணர்வுடன், பொறுப்புணர்வுடன், பயம் கலந்த எச்சரிக்கை உணர்வுடன் நீங்கள் உங்களது கடமையைச் செய்ய வேண்டும். 'கற்றது கை மண்ணளவு; கல்லாதது உலகளவு' என்பார்கள். இந்த உண்மையின்

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# நீண்டநாள் யுத்தத்திற்கு ஸ்ரீலங்கா அரசு உத்தரவு

1994 ஆம் ஆண்டு ஆனி ...த்திற்கு முன்பாக தமிழீழ ...கிரமிப்பு யுத்தத்தை முடிக்க ...ண்டுமென சிறீலங்கா அரசு ...படைகளுக்கும் பணிப்புரை ...ங்கியுள்ளதாக ஏஜென்சிச் ...திகள் தெரிவிக்கின்றன. ...பணிப்புரையின்படி 1994 தை ...தத்திற்கு முன்னதாக தென்த ...மிழத்தையும் (இலங்கையின் கிழக்கையும்) 1994 ஆனி மாதத்திற்கிடையே மிகுதியான தமிழீழத்தையும் (இலங்கையின் வடக்கையும்) கைப்பற்றிவிடவேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இதற்கிடை சிறீலங்காவின் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னா, தான் மார்கழியில் ஓய்வு பெறுவதற்கு முன்னதாகவே தமிழீழத்தை ஆக்கிரமித்துவிட வேண்டும் எனத் துடியாய்த்துடிப்பதாக செய்திகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. இஸ்ரேலிய ஆலோசனையில் அமைக்கப்பட்ட கூட்டுப்படைத் தலைமையக இராணுவ நிர்வாக முறை மாற்றப்பட்டு கூட்டுப்படைத் தலைமையகம் கலைக்கப்பட்டு, கூட்டுப்படைத் தலைமையகத் தளபதி கமில்டன் வனசிங்கா

தொடர்ச்சி 14ம் பககம் ....



செஞ்சோலைக் குழந்தைகளுடன், தேசியத்தலைவர் பிரபாகரன்

சின்ன விளக்குகளின் சிரிப்பு - இந்த அண்ணன் இலட்சியத்தின் இருப்பு

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போர் முரசு

தமிழீழ மண்ணில் மீண்டும் சிறீலங்கா அரசின் போர் முரசு கேட்கிறது. சிறீலங்கா ஜனாதிபதி தத்துவார்த்தரீதியாக, "இங்கு காணப்படுவது இனப்பிரச்சினையல்ல, பயங்கரவாதமே" எனக்கூறி தமது படையெடுப்பினை நியாயப்படுத்தும் செயற்பாட்டைச் செய்துவருகிறார். அதேவேளை, தமது முப்படைகளுக்கும் போரை நடத்துவதற்கான காலக்கெடுவையும் விதித்துள்ளார். இதன் மூலம் தத்துவார்த்த ரீதியாகவும், செயற்பாட்டுரீதியாகவும் சிறீலங்கா ஜனாதிபதி போர் முரசறைகிறார். "யாழ்ப்பாண மக்களுக்கு எதை நாம் கொடுக்கவில்லை" எனக் கூறும் ஜனாதிபதியின் கூற்று, அவர் எவ்வளவு தூரத்திற்கு, யதார்த்த உண்மைகளுக்கு திரைபோட முனைகின்றார் என்பதை எடுத்துக்காட்டுகிறது. தமிழர்களின் பிரச்சினைகளை வடக்குக்கு மாத்திரம் கட்டுப்படுத்தவே நாம் முயல்கிறோம் எனவும் சிறீலங்கா ஜனாதிபதி அம்பாறையில் நடந்த கூட்டமொன்றில் பேசியுள்ளார். தமிழர்களுக்கிடையில் பிரதேச ரீதியான பிரிவினையை வளர்ப்பதற்கு சிறீலங்கா அரசாங்கம் காட்டும் அக்கறையை, ஜனாதிபதியின் பேச்சு அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது. இவ்விதமாக சிறீலங்கா ஜனாதிபதி தமிழர்களுடைய தேசிய இனப்பிரச்சினையை -மண்மீட்பிற்கான போரை அர்த்தமற்றதொன்றாக எள்ளி நகையாடுவது, அவர் எவ்வளவு தூரத்திற்குத் தன்னை பௌத்த -சிங்கள வெறிக்கு ஆளாக்கியுள்ளார் என்பதனை உலகிற்கு எடுத்துக்காட்டுகிறது.

அதேவேளை, பாலஸ்தீனப் பிரச்சினைக்கு அமைதி ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இவ் ஒப்பந்தத்தில் பாலஸ்தீனியாவின் தாயக உரிமையை இஸ்ரேல் அங்கிகரித்துள்ளமையே முக்கியமான விடயம். எத்தனையோ வகைகளில் இஸ்ரேல், பாலஸ்தீனர்களின் தாயக உரிமையை அழித்தொழிக்க முயன்றது. வல்லரசுகள் கூட பக்கத்துணையாக நின்றன. ஆயினும் இன்று சத்தியம்வென்று பாலஸ்தீனர்களின் தாயக உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஒப்பந்தத்தின் மிகுதியான சாராம்சங்கள் அமுலாவதைப் பொறுத்தே ஒப்பந்தத்தின் வெற்றி தங்கியிருக்கும். கிட்டத்தட்ட 40 ஆண்டுகளாக முட்டிமோதிக்கொண்ட பாலஸ்தீனியரும், இஸ்ரேலியரும் செய்துகொண்டுள்ள இந்த ஒப்பந்தம் தமிழர் இனப்பிரச்சினையில், சிறீலங்கா அரசுக்கு ஒரு புதிய படிப்பினையாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

இலங்கையிலும் இதைத்தான் இன்றைய சமாதானத்தை விரும்புபவர்கள் கேட்கின்றனர். தமிழரின் தாயக உரிமை அங்கிகரிக்கப்படுவதின் அடிப்படையிலேயே, இலங்கையில் காணப்படும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்.

இந்த உண்மையை மூடி மறைப்பதற்காகவே சிறிலங்கா ஜனாதிபதி, "இலங்கையில் காணப்படுவது இனப்பிரச்சினையல்ல பயங்கரவாதமே" என வர்ணித்துக் கொண்டிருக்கின்றார். அதே வேளை தனது முழு இராணுவ பலத்தையும் பிரயோகித்து தமிழீழ விடுதலைப்போராட்டத்தை நசுக்குவதற்கான இறுதி ஆயத்தங்களில் ஈடுபட்டும் வருகிறார்.

இந்நேரத்தில், தமிழீழத்தில் கேட்கும் போர் முரசை எதிர்கொண்டு தமிழீழ மண்ணை மீட்கவேண்டிய பெரும் பொறுப்பு ஒவ்வொரு தமிழரதும் கடமையாக உள்ளது: இந்த வரலாற்றுக் கடமையைச் செய்ய, தமிழன் தன் பிரதேசத்தில் தான் வாழவேண்டுமென்பதில்லை. எங்கு வாழ்ந்தாலும், உலகின் எந்த இடத்தில் வாழ்ந்தாலும் ஒவ்வொரு தமிழனுக்கும் இக்கடமையுண்டு என உணர்ந்து அணிதிரள்வோம். எமது மண்ணை மீட்க உறுதிபூணுவோம். ■

# அம்பாறையில் அதிரடிப்படை அட்டகாசம் அதிகரிப்பு

கடந்த சில வாரங்களாக, அம்பாறை மாவட்டத்தில் சிறீலங்கா விசேட அதிரடிப் படையினரின் பொதுமக்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. பல அப்பாவிப் பொதுமக்கள் குடும்பங்களாகவும், தனித்தனியாகவும் இப்படையினரால் கடத்தப்பட்டும் கைது செய்யப்பட்டும் உள்ளனர்.

கடந்த மாதம் 24ம் திகதி அம்பாறை தம்பிலுவில் கிராமத்தினுள் இரவு நேரத்தில் நுழைந்த அதிரடிப்படையினர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரைக் கடத்திச் சென்றனர். ஏரம்பு வரதராசா, ஞானமுத்து போசலை, வ. திருஞானவதனி (17), வ. லோகிதவதனி (15) ஆகியோரே கடத்திச் செல்லப்பட்டவர்களாவர். மறுநாளும் அதே கிராமத்தினுள் நுழைந்த அதிரடிப்படையினர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான தங்கராஜா, அவரது மனைவி பூரணம், த. புஸ்பராணி (20), புஸ்பமலர் (12) ஆகியோரையும் வன்னியசிங்கம், கெஞ்சலட்சுமி (24) ஆகிய இருவரையும் கடத்திச் சென்றனர்.

இம்மாதம் ஆறாம் திகதி இரவு தாண்டியடி உமிதி என்ற கிராமத்தில் திருமதி லலிதா ஜெயசிங்கம், நடராஜா சிவராஜன் ஆகியோரும் முருகேஸ் என்பவரும் இதே கிராமத்தில் இதற்கு முதல் தினமும் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை கடந்த மே மாதத்தில் தம்பிலுவில் விநாயகபுரத்தில் வைத்துக் கைதான திருமதி. இராசலட்சுமி சண்முகநாதன் என்பவரை படையினர் திருக்கோவில் முகாமில் தடுத்து வைத்துள்ளனர். கடந்த மாதம் இதே பகுதியில் கைதான திருமதி. திரான்சிஸ்கா சோமசுந்தரம் என்பவரை படையினர் காஞ்சிரன்குடா முகாமில் தடுத்து வைத்துள்ளனர். ■

## படையில் மீண்டும் சேருமாறு கமில்டனும் அழைப்பு

இராணுவத்தை விட்டு தப்பி ஓடியவர்களை மீண்டும் படையில் வந்து சேருமாறும், அவர்களுக்கு தண்டனை எதுவும் வழங்கப்படமாட்டாது எனவும் தளபதி கமில்டன் வணசிங்க அறிவித்துள்ளார்.

அண்மையில் இத்தகையதொரு கோரிக்கையை இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ண விடுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இராணுவத்திற்கு ஆள் திரட்ட நடத்தப்பட்ட நேர்முக பரீட்சையில் எதிர்பார்த்த அளவு ஆட்களை திரட்ட முடியாமல் போனதையடுத்தே, இராணுவ அதிகாரிகள் இவ்வாறு கோரிக்கைகள் விடுவதாக கொழும்புத் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களில் மூவாயிரம் பேர்வரை தலைமறைவாகத் திரிவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ■

## 53 வீடுகள் எரிப்பு

அம்பாறை வெல்லாவெளியிலுள்ள றெட்பானா கிராமத்தில் கோபாலபிள்ளை என்பவரை சீருடையில் வந்த ஆயுதம் தரித்த சிறீலங்கா ஏவலாளர்கள் சித்திரவதை செய்து கொன்றனர். இதனால் அச்சமடைந்த கிராமவாசிகள் அவ்வூரை விட்டு வெளியேறி இரவில் அயல் கிராமத்தில் தஞ்சமடைந்தனர். மறுநாள் வீடுதிரும்பியபோது கிராம மக்களின் 53 வீடுகளுட் தீக்கிரையாக்கப்பட்டுக் காண' பட்டது. ■

### அரச ஊழியர் இறப்புக் குறித்து

## ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பிவைப்பு

கடந்த மாதம் இறுதிப்பகுதியில் இரு அரச ஊழியர்கள் படையினரின் கண்மூடித்தனமான தாக்குதல்களினால் கொல்லப்பட்டதைக் கண்டித்து, அரச பொதுச் சேவைச் சங்கத்தின் யாழ். கிளை ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. மேற்படி கொல்லப்பட்ட அரச ஊழியர்களுக்கான இரங்கல் கூட்டம் யாழ். செயலகத்தில் நடைபெற்றபோது, இந்த மகஜர் யாழ். அரச அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. யாழ். மாவட்ட அரச அதிபரின் பரிபாலனத்தின் கீழ் இருந்த அரச ஊழியர்களான சி. விசாகமூர்த்தி, க. நவரட்ணம் ஆகியோர் கடந்த மாத இறுதிப் பகுதியில் அரச படைகளின் விமானத்தாக்குதலாலும் (சுழிபுரம்), எறிகணைத்தாக்குதலாலும் (தெல்லிப்பளை) கொல்லப்பட்டுள்ளனர்.

வேதனைக்குரிய இச்செயலை வன்மையாகக் கண்டிப்பதுடன், எமது ஆழ்ந்த கவலையையும் தெரிவிக்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

## அதிரடிப்படையின் கட்டுப்பாடு ஆரையம்பதி வரை விஸ்தரிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் பதினாறு மைல் தூரம் வரையிலான பிரதேசம், இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட எல்லையான பெரிய நீலாவணையில் இருந்து பதினாறு மைல் தூரம் வரை அதாவது ஆரையம்பதி வரை விஸ்தரிக்கப்பட்ட பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினர் இப்போது பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிரடிப்படையின் பொறுப்பில் உள்ள பிரதேசங்களுக்குப் பொறுப்பாக, பொலிஸ் அத்தியட்சகர் சரத் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் போரதீவு, செட்டிபாளயம், தேற்றாத்தீவு, தாழங்குடா, மண்முனை, ஆரையம்பதி, அம்பிலாந்துறை, மகிழடித்தீவு, கிரான்குளம் ஆகிய ஒன்பது இடங்களில் அதிரடிப்படை தற்போது முகாமிட்டுள்ளது. ■

### உத்தியோக பூர்வமற்ற ஓர் சந்திப்பு

## உத்தியோகபூர்வ பேச்சுக்கான புதியதோர் முயற்சி

தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் திரு லோறன்ஸ் திலகருக்கும், பிரான்சிற்கு விஜயம் செய்த சிறீலங்கா அமைச்சர் திரு. தொண்டமானுக்குமிடையே "உத்தியோகபூர்வ முறையிலான பேச்சுவார்த்தை" எதுவும் இடம்பெறவில்லை. உத்தியோகபூர்வமற்ற (தனிப்பட்ட) சந்திப்பு மட்டுமே இடம்பெற்றது. இச்சந்திப்பு, திலகர் விடுதலைப்புலிகளின் மத்திய குழு உறுப்பினர் என்ற முறையிலேயோ, தொண்டமான் சிறீலங்காவின் அமைச்சர் என்ற முறையிலேயோ நடைபெறவில்லை. "விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசிற்கும் இடையில் உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தையை ஏற்படுத்தும் புதியதோர் முயற்சி குறித்தே" இவர்கள் தமது சந்திப்பில் பேசிக்கொண்டனர்.

விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடம், அரசாங்கத்துடனான நேரடிப் பேச்சுவார்த்தைக்கான கதவு திறந்துள்ளதாக நீண்ட காலமாக அறிவித்து வருகின்றது. இராணுவ அழுத்தங்கள் மூலம் அரசாங்கத்தைப் பேச்சுவார்த்தைக்கு இணங்கவைக்க தளத்தில் முயற்சி எடுப்பது போல், அமைச்சர் தொண்டமான் ஊடாகவும் அதனைச் செய்யமுடியுமா என்பதை ஆராய்வதே இச் சந்திப்பின் நோக்கமாக இருந்தது. இச் சந்திப்பின் போது தீர்வுத்திட்டம் எதுவும் கையளிக்கப்படவில்லை. "தமிழீழத் தனியரசுக்கான திட்டமும் அதற்கான நடவடிக்கையுமே தவிர, வேறொன்றும் கைவசமில்லை. ஆயினும் சமஸ்டி அமைப்பு முறை உட்பட ஏதாவது திட்டம், தமிழ் மக்களின் தாயகம், அவர்களின் சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை அங்கீகரிக்கக் கூடியவகையில் இருக்குமாயின், சிறீலங்கா அரசாங்கம் தான் அதனை முன்வைக்க வேண்டும்". அத்திட்டத்தைப் பரிசீலிக்கத் தயாராக இருப்பதாகவே தலைவர் பிரபாகரன் தெரிவித்துள்ளார். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தியாகி திலீபனின் நினைவுக் கூட்டத்தின் மீது விமானப்படை குண்டு வீச்சு

## 17 பொதுமக்கள் பலி

இந்திய அரசிடம் நீதிகோரி பன்னிரண்டு நாட்கள் உண்ணா விரதம் இருந்து தியாக மரணத்தைத் தழுவிக் கொண்ட, தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவுநாள் விழாக்கள், தமிழீழ மக்களால் உணர்வுபூர்வமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. இவரது நினைவுநாளை ஒட்டி தமிழீழமெங்கும் அடையாள உண்ணாவிரதங்கள், அஞ்சலிக்கூட்டங்கள், அஞ்சலி விழாக்கள் என்பன தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இவ் விழாக்கள், திலீபன் அவர்கள் மரணித்த இருபத்தியாறாம் திகதி (இந்த மாதம்) யுடன் நிறைவுபெறுகின்றன.

இதேவேளை, திலீபன் நினைவுக்கூட்டங்கள், விழாக்கள் நடைபெறுகின்ற இடங்களை இலக்குவைத்து சிறிலங்கா அரச படைகள் கண்மூடித்தனமாக குண்டுத்தாக்குதலையும் எறிகணைத் தாக்குதலையும் மேற்கொண்டு வருகின்றன. முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் சிறிலங்கா அரச படையினர் மேற் கொண்ட வெறியாட்டத்தினால், 16 தமிழ்ப் பொதுமக்கள் கோரமாகக் கொல்லப்பட்டுள்ளனர். 40 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவுக்கூட்டம் நடந்துகொண்டிருந்த போதே, சிறிலங்கா விமானப்படையும், இராணுவமும் வெறிகொண்டு தாக்கின. குண்டுத்தாக்குதலும், எறிகணைத் தாக்குதலும் ஏக காலத்தில் மேற்கொள்ளப்பட்டபோது, மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். இதில் 16 பொது மக்கள் ஸ்தலத்திலேயே பரிதாபகரமாக இறந்துபோயுள்ளனர்.

இது போன்று சுன்னாகத்திலும் திலீபனின் நினைவுநாள் நடந்து கொண்டிருந்தபோது, அங்கு திரண்டிருந்த மக்களை இலக்கு வைத்து சிறிலங்கா விமானப்படைமேற்கொண்ட தாக்குதலால், ஒரு சிறுமி காயமடைந்துள்ளார். மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

ஒரு புறம், யாழ் குடா நாட்டைத்தாக்குவதற்கான பாரிய படையெடுப்பு நடவடிக்கைகளை சிறிலங்காப் படைகள் எடுத்து வர, மறுபுறம் குண்டு வீச்சுக்கள் எறிகணைத்தாக்குதல்கள் ஆகியவற்றின் மத்தியிலும், இம்மண்ணின் மைந்தனுக்கு தமிழீழ மக்கள் தமது அஞ்சலியைச் செலுத்தி வருகின்றார்கள். ■



தலைவர் பிரபாகரன் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்ட இரு 20 எம்.எம் பீரங்கிகள், இரு 50 கலிபர் துப்பாக்கிகள் ஆகியவற்றைப் பார்வையிடுகிறார்.

அண்மையில் விடுதலைப்புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட 'சுப்பர் டோறா' படகு பற்றிய சில விபரங்கள்

## "சுப்பர் டோறா" படகு

1985 - 1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறிலங்காக் கடற்படையினரால் இப்படகானது:

- எதிரியின் கப்பலைத் துரத்திப்பிடித்தல்.
- யுத்த நேரங்களில் கடற்பிரதேசத்தைப் பாதுகாத்தல்.
- இரவு நேரங்களில் ரோந்தில் ஈடுபடுதல்.
- உளவு வேலைகளில் ஈடுபடுதல்.
- பெரிய கப்பல்களுக்குப் பாதுகாப்பு வழங்கல்

ஆகிய தேவைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டது. தற்போது இதுபோன்ற 10 வரையான படகுகள் சிறிலங்காக் கடற்படையினரிடம் உள்ளன. இப்படகானது இஸ்ரேலில் உள்ள, "ரம்ராஸ்" நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவற்றைத் தவிர சாதாரண டோறா, கொரியன் டோறா என வேறுவகைப் படகுகளும் சிறிலங்காக் கடற்படையினரால் பாவிக்கப்படுகின்றன. இவை யாவற்றிலும் பார்க்கிலும் "சுப்பர் டோறா" செயற்திறன் கூடியது. அத்துடன் இதன் நீள அகலங்களும் அவற்றைவிடக் கூடியது. இப்படகானது முற்றிலும் அலுமினியத்தால் செய்யப்பட்டது. இது சாம்பல் நிறமுடையது. இப்படகில் மொத்தமாக 9 -12 கடற்படையினர் பணிபுரிவர். இவர்கட்கு கட்டளையிடும் அதிகாரியாக "லெப்ரினன்ட்", "லெப். கொமாண்டர்" பதவியையுடைய கடற்படையினர் பணிபுரிவர். இப்படகு பற்றிய சிலதரவுகள் வருமாறு:

- படகின் அண்ணளவான நீளம்:-41 அடி.
- படகின் அண்ணளவான அகலம்:-15 அடி.
- படகின் ஆகக்கூடிய வேகம்:-மணிக்கு 66. 67 கிலோ மீற்றர்.
- படகின் சதாரண வேகம்:-மணிக்கு 61. 29 கிலோ மீற்றர்.
- படகு ஒரு செக்கனில் நகரும் தூரம்:-17. 025 மீற்றர்.
- படகின் வேகம் (கடல் மைல்களில்):-35-40 கடல் மைல்கள்.

படகில் பொருத்தப்பட்டுள்ள ஆயுதத் தளபாடங்கள்:-

- ஒற்றைக் குழல், "ஓவர்லிக்கன்" 20 மி.மீ. பீரங்கி- 2.
- 50 கலிபர் விமான எதிர்ப்பு பீரங்கி- 2.
- இயந்திரத் துப்பாக்கிகள்.

படகில் பொருத்தப்பட்ட ஏனைய சாதனங்கள்:-

- "டெக்கா" றேடர்- 1
- வி. எச். எவ். தொலைத்தொடர்புச் சாதனம் - 1
- ஜெனரேட்டர் இரண்டு.
- என்ஜின் - 2.
- 8' நீளமான சிறிய படகு - 1 (சில வேளைகளில் இராது.)
- திசையறி கருவிகள் - 2.
- "சி. கியூ. ஆர்." நங்கூரம் - 1.

## அகதி முகாம்களில் போலியோ அபாயம்

அகதி முகாம்களில் வசிக்கும் குழந்தைகளுக்கு போலியோ நோய் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், அவர்களுக்கு மேலதிகமாக இருதடவைகள் போலியோ தடுப்பூசி மருந்து ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு வழமையாகப் போடப்படும் போலியோத் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டிருந்தாலும் மேலும் இரு தடவைகள் மருந்து ஏற்றப்பட வேண்டுமெனவும் சகல அகதி முகாம்களில் உள்ள குழந்தைகளுக்கும் உடனடியாக இத்தடுப்பூசி போடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

## இராணுவச் செலவீட்டைச் சமாளிக்க கல்விக்கான ஒதுக்கீட்டில் வெட்டு?

அதிகரித்துவரும் இராணுவச் செலவீட்டைச் சீர்செய்யும் வகையிலும், உலக வங்கி மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களின் நெருக்குதல்கள் காரணமாகவும் பாடசாலை, பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றைத் தனியார் மயமாக்கும் முயற்சியில் சிறிலங்கா அரசு ஈடுபட்டுள்ளது. இதற்கு ஏற்றாப்போல் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் எண்ணிக்கையையும் குறைக்கத் திட்டமிட்டுள்ளது.

அதிகரித்துவரும் இராணுவச் செலவீட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யும்பொருட்டு, அரசாங்கச் செலவீனங்களில் பத்து வீதத்தை வெட்டுவதற்கு ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க ஏற்கனவே அறிவித்திருந்தார். இருப்பினும், இராணுவச் செலவீட்டை ஈடு செய்வது சிரமமாகவே உள்ளது.

இதேவேளை சர்வதேச நிதி நிறுவனங்கள் பொதுச் செலவீனங்களைக் குறைக்குமாறும், தனியார் மயமாக்கலை ஊக்குவிக்குமாறும் அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து வருகின்றன.

இந்த நிலையில் அரசு கணிசமான தொகையைச் செலவிடு செய்யும் கல்வி, சுகாதாரம் ஆகியவற்றிற்குரிய தொகையை மட்டுப்படுத்த அல்லது மிகவும் குறைத்துவிட நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரியவருகின்றது.

பல்கலைக்கழகங்களை தனியார் மயமாக்கல் குறித்து அண்மையில் ராஜகிரிய சுதேச மருத்துவக் கல்லூரியில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் எச்சரித்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய இணைப்பாளர் எஸ். அழகக்கூன், உலக வங்கியின் வழிகாட்டலின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களையும் பாடசாலைகளையும் தனியார் மயமாக்க அரசு முயற்சிக்கின்றது என்றார். ■

### இராணுவத்தில் சேர 5ஆம் வகுப்புக் கல்வி

சிறிலங்கா இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பிற்கு ஐந்தாம் வகுப்பில் சித்தி, குறைந்தளவு கல்வித் தகைமையாகக் கருதப்படும் என ஆட்சேர்ப்புப் பிரிவு அறிவித்திருந்தது. முன்னர் இராணுவ ஆட்சேர்ப்பிற்கு குறைந்தளவு கல்வித் தகைமையாக க.பொ.த. சாதாரண தரம் எதிர்பார்க்கப்பட்டதும், பின்னர் அது எட்டாம் வகுப்புச் சித்தியாகக் குறைக்கப்பட்டதும் யாவரும் அறிந்ததே. தற்போது இந்த கல்வித் தகைமை ஐந்தாம் வகுப்பாகக் குறைக்கப்பட்டுள்ளமை இராணுவ ஆட்சேர்ப்பிற்கு சிங்கள இளைஞர்கள் அவ்வளவு ஆர்வம் காட்டாததே காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. ■

## 20 மி. மீ. இலகுபீரங்கி

நேற்று பருத்தித்துறைக் கடலில் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்ட 20 மி. மீ. இலகு பீரங்கி (அஸ்ரா ஓ எலிக்கன் 41 ஏ இலகு கலிபர் பீரங்கி) குறித்த சில தகவல்கள்:

- கலிபர்: 20 மி. மீ.
- குழலின் நீளம்: 70 கலிபர்கள்.
- குண்டின் ஆரம்பவேகம்: செக்கனுக்கு 825-835 மீற்றர்கள்.
- தூரவீச்சு கிடையாக - 4. 39 கிலோமீற்றர்.
- தூரவீச்சு உயர்த்தி - 3 கிலோமீற்றர்.
- சுடும் வீதம் - நிமிடத்துக்கு 800 குண்டுகள்.
- வெடிப் பொருளின் நிறை - 244 - 264 கிராம் (சுமார் 1/4 கிலோ.)

அஸ்ரா ஓ எலிக்கன் ஏ 41 ஏ இலகு கலிபர் பீரங்கி ஒரு பிரித்தானியத் தயாரிப்பாகும். இது பன்முகத் தேவைகளுக்கான சிறு பீரங்கி. 1939 இலிருந்து பிரித்தானியக் கடற்படைக்கு இலகு ரகப் பீரங்கிகளை உற்பத்திசெய்யும் பி. எம். ஏ. ஆர். சி. எனும் நிறுவனத்தின் பெயர் 1989 அஸ்ரா டிபென்ஸ் சிஸ்ரம்ஸ் என மாற்றம் செய்யப்பட்டது. கிஸ்பானோ சுய்சா 804 எனும் சிறு பீரங்கி ரகத்தை அடிப்படையாகக் கொண்ட இது வாயுவால் இயக்கும் பின்னுதைப்புள்ள பீரங்கியாகும். பீடத்தில் பொருத்தப்பட்ட ரவைக்கூட்டுக் காவியுடன் 60 குண்டுகள் கொள்ளக்கூடிய ஒரு உருளையைக் கொண்டுள்ளது. இதன் பீடம் 17 மீற்றர் உயரமும் 2 மீற்றர் நீளமும் உடையது. ஏ41 ஏ என்ற இப்பைக்கலனின் உற்பத்தி 1970 இல் ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் உற்பத்தி செய்யப்படுகிறது. அவுஸ்ரேலியா, பங்களாதேஸ், கனடா, டென்மார்க், ஜேர்மனி, இஸ்ரேல், இந்தியா, லெபனான், லிபியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், தென்ஆபிரிக்கா, ஸ்பெயின், பிரித்தானியா, யூகோஸ்லோவியா உட்பட 55 நாடுகளில் கடற்படையின் பாவனையில் உள்ளது. ■



டோறாவின் பின் தளத்தில் 20 எம்.எம் பீரங்கியுடன் சிறிலங்கா கடற்படையினர் ஒருவர்.

www.tamilarangam.net



# நோபல் பரிசாளரின் தீர்வுத் திட்டமும் சிங்கள அரசாங்கத்தின் புரளிகளும்

சாணக்கியன்

தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வுத் திட்டத்தை முன்மொழிந்த அனைத்துலகக் கூட்டுறவுக்கான உலகசபை, அண்மையில் தலைவர் பிரபாகரனுக்கும் சிறீலங்கா ஜனாதிபதி விஜயதுங்காவிற்கும் கடிதங்களை அனுப்பி வைத்தது. உலக சபையின் சர்வதேசச் செயலாளர் நாயகம் உட்பட அமெரிக்கா, பிரிட்டன், பெல்ஜியம், நெதர்லாந்து ஆகிய நாடுகளின் சமாதான நோபல் பரிசுபெற்ற அறிஞர்கள் இந்தத் தீர்வுத் திட்டத்தில் ஒப்பமிட்டிருந்தனர்.

ஐ. நா. சபையின் நடுநிலைமையின்கீழ் போர் நிறுத்தத்தைக்கொண்டுவந்து, வட கிழக்கை சமாதானப் பிரதேசமாக்கி தமிழர் மாநிலத்தில் சமஸ்ட்டி ஆட்சியை நிறுவும் ஐந்து அம்ச யோசனைகள் அடங்கியதாக இத்தீர்வுத் திட்டம் அமைந்துள்ளது. சமாதான நோபல் பரிசு பெற்றோர் அடங்கிய நல்லெண்ணத் தூதுக்குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளுடனும் சிறீலங்கா அரசாங்கத்துடனும் இத்தீர்வுத் திட்டம் பற்றி பேச்சுக்களை நடத்த விரும்புவதாகவும் உலக சபையின் செயலாளர் நாயகம் எழுதியிருந்தார்.

இந்தத் தீர்வுத்திட்டத்தை விடுதலைப் புலிகள் இயக்கம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கு முன்னரே, சிறீலங்கா அரசு அதனை நிராகரித்துவிட்டது. அவசர அவசரமாக இத்திட்டத்தை நிராகரித்தது மட்டுமன்றி, தமிழர் பிரச்சினை குறித்து மிகவும் அபத்தமான, கேலிக்கூத்தான விளக்கம் ஒன்றையும் அரசாங்கம் கொடுத்திருக்கிறது. இந்த விளக்கத்தை உன்னிப்பாக ஆராய்ந்து பார்த்தால், விஜயதுங்கா அரசின் நிலைப்பாட்டை தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

'இலங்கையின் வட - கிழக்கில் நிலவும் வன்செயல் பிரச்சினை முற்றுமுழுதாக ஒரு உள்நாட்டுப் பிரச்சினையாகும். அது ஓர் இனப்பிரச்சினை அல்ல. துப்பாக்கிக் கலாச்சாரத்தைக் கொண்ட ஒரு பயங்கரவாதப்பிரச்சினையாகும்' என்று கூறுகிறது அரசு. இது முழுப்பூசனிக்காயை சோற்றிற்குள் புதைக்க முயலும் புரளிக்கதையாகும்.

தமிழர் பிரச்சினை ஒரு இனப் பிரச்சினை என்பது உலக சமுதாயமே ஏற்றுக்கொண்ட ஒரு அரசியல் உண்மை. இன ஒடுக்குதலில் தோற்றப்பாடு கண்டு, இன முரண்பாடாக விரிசல் எடுத்து, இனப்பிரச்சினையாக வடிவம் பெற்ற தமிழர்பிரச்சினை ஒரு நீண்ட கொந்தளிப்பான வரலாற்றில் உருவாக்கம் பெற்றது என்பதை உலகம் அறியும். வன்செயல் கோலத்தில் புரட்சிகர ஆயுதப் போராட்டம் தோற்றம் கொள்வதற்கு முன்னரே, அதாவது மென்முறைப் போராட்ட யுகத்திலேயே தமிழர் பிரச்சினையானது சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்ட ஒரு தேசிய இனப்பிரச்சினையாக வடிவம் பெற்றது. அரச வன்முறையால் தமிழரின் மென்முறைப் போராட்டம் செயலிழந்து செத்துப்போக, புலிகளின் ஆயுதப் போராட்டம் தோற்றம் கொண்டது. ஆயுதப் போராட்டத்தின் வளர்ச்சியும் அகற்சியும் தமிழீழத் தேசிய உருவாக்கத்திற்கு உரமூட்டியதுடன் தமிழரின் இனப்பிரச்சினையை முனைப்புறச்செய்து சர்வதேசமயப்படுத்தியது. இன்று தமிழர் பிரச்சினையை ஒரு இனப்பிரச்சினை யாகவே சர்வதேச உலகம் பார்க்கிறது. வரலாற்று நூல்களிலும் அரசியல் மதிப்பாய்வுகளிலும், ராஜதந்திரக் குறிப்புக்களிலும், பத்திரிகை விமர்சனங்களிலும், மனித உரிமைப் பிரகடனங்களிலும் தமிழீழ மக்களின் பிரச்சினை இனப்பிரச்சினையாகவே ஆவணப்படுத்தப்படுகிறது. நிலமை இப்படியிருக்கும்போது இலங்கையில் இனப்பிரச்சினை என்பதே இல்லையென விஜயதுங்கா அரசு பகிரங்கப் பிரகடனங்களை வெளியிடுவது மிகவும் கேலிக்கூத்தான அரசியல் பித்தலாட்டமாகும்.

அடக்குமுறையாளரின் அகராதியில் அடக்கப்படுவோரின் விடுதலைப் போராட்டம் 'பயங்கரவாதம்' என அழைக்கப்படுகிறது. அரச அடக்குமுறையை நியாயப்படுத்தி, ஒடுக்கப்படுவோரின் புரட்சிகரப் போராட்டங்களை நசுக்கிவிடுவதற்கு ஏகாதிபத்தியவாதிகளும் இனவாதிகளும் இந்த சொற்பதத்தைப் பாவிப்பது வழக்கம். இதன் பிரகாரம் தென்னாபிரிக்கக் கறுப்பர்களும், பாலஸ்தீனியர்களும், காஸ்மீர் மக்களும், ஈழத்தமிழர்களும் மற்றும் உலகடங்கிலுமுள்ள ஒடுக்கப்படும் மக்கள் அனைவரும் 'பயங்கரவாதிகள்' எனப்படுவர். அடக்குமுறையாளர்கள் தமது அடக்குமுறைக் கருவியாக ஆயுதப் பலாத்காரத்தைப் பாவிக்கின்றார்கள். இந்த ஆயுதப் பலாத்கார வன்செயல்கள் எல்லாம் 'சனநாயகம்' 'சட்ட ஒழுங்கு' என்ற கோட்பாடுகள் மூலம் நியாயப் படுத்தப் படுகின்றன. சிறிலங்கா அரசும் இந்த விதண்டாவாதத்தையே முன் வைக்கிறது.

அரச பயங்கரவாத இனஒழிப்பிலிருந்து தம்மைப்பாதுகாத்துக் கொள்ளவும், தமது சொந்தத் தேசத்தில் தன்னாட்சி உரிமையையை நிலைநாட்டவும் தமிழ் மக்கள் ஆயுதமேந்தி நிற்கிறார்கள். இந்த உரிமைப் போராட்டமும் அதன் வெளிப்பாடாகிய ஆயுத எதிர்ப்பு இயக்கமும் சர்வதேச சட்டப் பிரமாணங்களின் பிரகாரம் நியாயமானதே. வாழும் உரிமையும் தாயக உடமைப்பாட்டு உரிமையும் மனிதனின் அடிப்படை உரிமை என்பதால் இந்த உரிமையை நிலைநாட்ட எந்த வடிவத்திலும் போராடுவது சட்டரீதியானது. நியாயமானது. ஆயுதப் போராட்டங்களும் இந்த உரிமைப்பாட்டின் அடிப்படையில்தான் நெறிக்கப்பட்டன. இதனைத் துப்பாக்கிக் கலாச்சாரமென்றும், பயங்கரவாதமென்றும் கொச்சைப்படுத்த முயல்வது அரசியல் அசட்டுத் தனமாகும். தமிழரின் இனப்பிரச்சினையையும், அதனால் தோற்றம் கொண்ட ஆயுதப் போராட்டத்தையும் உள்நாட்டு வன்செயல் விவகாரம் என சிறுமைப்படுத்தி உலகத்தின் கண்களில் மண்ணைத் தூவிவிட விஜயதுங்கா அரசு முயற்சிக்கின்றது. ஆனால், உலக அரங்கில் இந்தப் பொய்ப் பிரச்சாரம் எடுபடப் போவதில்லை. ஏனென்றால், தமிழரின் தேசிய இனப் பிரச்சினை அந்தளவிற்கு உலகமயப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழரின் பிரச்சினை முற்றுமுழுதாக ஒரு உள்நாட்டுப் பிரச்சினை என்ற இன்னுமொரு விதண்டாவாதத்தையும் சிங்கள அரசு முன்வைக்கின்றது. 1983 ஆடிக் கலவரத்தையடுத்து தமிழரின் தேசிய இனப்பிரச்சினை சர்வதேசப்பரிமாண அகற்சியைப் பெற்றது. இனக்கொலை வடிவத்திலான மனித உரிமை மீறல்கள், உலகளாவிய ரீதியில் அகதிகளாக தமிழர்களின் இடம்பெயர்வு, இஸ்ரேலிய ஊடுருவல், இந்தியத் தலையீடு என்ற வகையில் தமிழர் பிரச்சினை பிராந்திய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் விரிவாக்கம் பெற்றது. தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தமிழகத்திலும் இந்திய உபகண்டத்திலும் பாரிய தாக்கங்களை விளைவிக்கலாம் என இந்தியா அஞ்சியதன் விளைவாகவே இந்திய -இலங்கை ஒப்பந்தம் உருவாகியது. இந்த ஒப்பந்தம் தமிழரின் பிரச்சினையை இந்தியாவின் பூகோள -கேந்திர ஆதிக்க அபிலாசைகளுடன் பின்னிப் பிணைந்தது. ஐரோப்பாவிலும், கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் தமிழர்களின் இடம்பெயர்வு ஒரு சர்வதேச அகதி பிரச்சினையாக தமிழரின் பிரச்சினையை விஸ்பருப பரிமாணம் பெறச் செய்தது. அத்துடன் தமிழருக்கு எதிரான இனஒடுக்குதலும் யுத்தமும் பெரும் மனித உரிமை மீறல் பிரச்சினையாக சர்வதேச அரங்குகளில் கண்டனங்களுக்கு உள்ளாகி வருகின்றது. அதுமட்டுமன்றி, ஒரு தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் என்ற ரீதியில் உலக தேசிய போராட்டங்களில் இணைபிரியாத அங்கமாகவும் தமிழர் பிரச்சினை சர்வதேச முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. இந்த வகையில் பூகோள விரிவாக்கம் கண்டிருக்கும் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை முற்றுமுழுதாக ஒரு உள்நாட்டுப் பிரச்சினையாகவும் அர்த்தமற்ற வன்செயல் விவகாரமாகவும் சிறீலங்கா அரசு சித்தரிக்க முயல்வது சிறுபிள்ளைத் தனமானது.

அனைத்துலகக் கூட்டுறவுக்கான உலக சபைக்கு சிறீலங்கா எழுதியுள்ள கடிதத்தில் ஏராளமான பொய்களும், புரளிக் கதைகளும் திரித்துவிடப்பட்டிருக்கின்றன. விடுதலைப் புலிகளின் பயங்கரவாத ஆட்சியிலிருந்து அப்பாவித் தமிழ் மக்களை காப்பாற்றுவதற்காக அரசாங்கம் தனது அனைத்து வளங்களையும் பிரயோகித்து ஒரு யுத்தத்தை நடத்திக் கொண்டிருப்பதாக ஓர் அபாண்டமான பொய் சொல்லப்பட்டிருக்கிறது. அத்துடன் செயலிழந்து கிடக்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவும், செத்துப் போன மாகாணசபைத் திட்டமும் தமிழருக்கு சுயாட்சி அதிகாரம் வழங்கும் முயற்சியில் ஈடுபட்டி



ருப்பதாகவும் இன்னொரு புரளிக் கதையும் கூறப்படுகிறது. இப்படியெல்லாம் பொய்க்கு மேல் பொய்யாக கட்டுக்கதைகள் சொல்லி முழு உலகத்திற்கும் ஏமாற்றுவித்தை காட்டுகிறது விஜயதுங்கா அரசு. சிங்களப் பேரினவாதத்தின் இந்தப் புராணக் கதைகளை நோபல் பரிசு பெற்ற வித்தகர்கள் எந்தளவிற்கு ஜீரணித்துக் கொள்கிறார்களோ தெரியவில்லை. ஆயினும் சிறீலங்கா அரசு ஓர் உண்மை விளக்கத்தினைக் கொடுக்கவில்லை என்பதை நிச்சயமாக உணர்ந்துகொள்வார்கள்.

சமாதான நோபல் பரிசு பெற்றோரின் உலகசபை முன்வைத்த தீர்வுத் திட்டம் புலிகள் இயக்கத்திற்கு சார்பானது என பிரதமர் ரணில் கூறியிருக்கிறார். இப்படியாகக் கூறியிருப்பதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அதாவது இந்த உலக சபை விடுதலைப் புலிகள் இயக்கத்தை தமிழரின் போராட்ட சக்தியாக, தமிழரின் விடுதலை இயக்கமாக அங்கீகரித்திருக்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் மட்டும் பேச்சுக்களை நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமென உலகசபை வலியுறுத்தியிருக்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒழித்துக்கட்ட வேண்டுமென கங்கணம் கட்டிநிற்கும் சிறீலங்கா அரசுக்கு இந்த யோசனை ஆத்திரத்தை மூட்டியிருக்கிறது. இதன் காரணமாகவே விஜயதுங்கா அரசு இந்தத் தீர்வுத் திட்டத்தை அவசர அவசரமாக குப்பைத் தொட்டிக்குள்வீசி எறிந்துவிட்டு, ஆயுத கலாச்சாரம் பற்றி தத்துவார்த்தம் பேசியிருக்கிறது. வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் மா நிலம், சமஸ்டி போன்ற யோசனைகளும் சிங்களப் பேரினவாதிகளுக்கு கொதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த யோசனைகளையெல்லாம் ஒரேயடியாக நிராகரித்துவிடும் நேரத்தில்தான், இனப்பிரச்சினை என்பது இங்கு இல்லை என்ற இமாலயப் பொய்யை அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது.

தமிழர் பிரச்சினையில் சிங்களப் பேரினவாதம் எத்தகைய அநீதியான கடும்போக்கை கடைப்பிடிக்கிறது என்பதை விஜயதுங்கா அரசின் இந்த நிலைப்பாடு உலக சமுதாயத்துக்கு தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது. இந்த நிலையில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையில் அக்கறையும் அனுதாபமும் கொண்ட உலக சமாதான அமைப்புக்கள் தமிழரின் தேசிய சுயநிர்ணய உரிமைப் பிரச்சினையை ஐ. நா. அரங்கில் எழுப்பி, தமிழரின் தாயகத்திற்கும் தன்னாட்சி உரிமைக்கும் சர்வதேச உலகின் அங்கீகாரத்தைப் பெற்றுத் தருவதே சாலச் சிறந்த வழியாகும். ■

## நாடு நிச்சயம் ....

ஒவ்வொருவரினதும் பொருளாதார வசதிக்கேற்ப பணம் அறவிடப்பட்டு..... விடுதலை.....? இவ்வாறு தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கையில் தான், திடீரென ஒருநாள் சிறீலங்காவின் காவற்துறையினரின் சுற்றி வளைப்பிற்குள் அகப்பட்ட அவ்விளைஞர்கள் கைது செய்யப்பட்டு, கூண்டினுள் அடைத்து வைக்கப்படுகின்றனர். இக் கூண்டினுள் வேறும் பல இளைஞர்களும், நடுத்தர வயதினரும் இருந்தனர். மறுநாள் காலை இவர்களின் இடத்திற்கு ஒரு காவற்துறை அதிகாரியுடன் வந்த தமிழ் ஆசாமி, குறிப்பிட்ட சிலரைக் காட்டி, கூண்டை விட்டு வெளியேற்றினார். கமலேஸ்வரன் கூண்டின் உள்ளேயே இருந்தான். கூண்டு வாசல் கதவு பூட்டப்படும்போது கமலேஸ்வரனின் நண்பர்களில் ஒருவன் "அவரும் எங்கட ஆள் தான்" என்று கமலேஸ்வரனைச் சுட்டிக்காட்டிக் கொண்டு தமிழ் ஆசாமியின் முகத்தைப் பார்த்தான். தமிழ் ஆசாமி தன் முகத்தைத் திருப்பி காவல்துறை அதிகாரியைப் பார்த்துச் சிரித்தார், கமலேஸ்வரனும் கூண்டிலிருந்து விடுதலையானான். விடுதலையானவர்கள் ஒரு "கையேஸ்" வானில் ஏற்றப்பட்டு ஒரு வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கே மிடுக்கோடு நின்ற பிறிதொரு ஆசாமி பேசுகின்றார்:

"தோழர்களே, இங்குள்ள பிரச்சினைகள் உங்களுக்குத் தெரியும்தானே, நீங்கள் வவுனியாவுக்குப்போய் அங்க ஆமியோட நிக்கிற எங்கட மற்ற தோழர்களோட சேர்ந்து நில்லுங்கோ. நாளைக்குக் காலம்பிற போற ரெயினிலேயே எல்லோரும் போங்க....."

எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு சம்மதத்திற்கு அறிகுறியாக மௌனமாக நிற்கின்றனர். மறுநாள் காலையில் அனைவரும் வவுனியா வருகின்றனர். கமலேஸ்வரன், கமலன் என்ற பெயர் உள்ளவனாக மாறுகின்றான். வடபகுதிக்குள் இருந்து வவுனியா நகரத்திற்குச் செல்லும் மக்களில், தனக்குத் தெரிந்த வெளிப்படையான போராட்ட உணர்வுள்ள மக்களைக் காட்டிக் கொடுப்பதோடு, ஏனைய மக்களோடு சாதாரணமாக உரையாடி, அவ்வுரையாடலில் இருந்து நொச்சிமோட்டையில் உள்ள விடுதலைப் புலிகளின் நிலைப்பாடுகள் பற்றிய தகவல்களைத் திரட்டி, படையினருக்குக் கொடுக்கும் பணியை முழுமனதோடு செய்து கொண்டிருந்தான்.

3

"டேய் கமலன், உன்ர ஆள் அங்கவந்து நிக்குது. நீ என்னன்டா இஞ்ச யோசிச்சுக்கொண்டு இருக்கிறா?" என்ற குரல் கேட்டு சுயநினைவிற்கு வந்த கமலேஸ்வரன் "அந்த ஆளைப் போகச் சொல்லு மச்சான். நான் பிறகு சந்திக்கிறன்" எனக் கூறிவிட்டு, மீண்டும் அப்படத்தைப் பார்க்கிறான். அதன் கீழ் உள்ள வரிகளைப் பார்க்கின்றான். "நேற்றைய தினம் நொச்சிமோட்டை நோக்கி வந்த சிறீலங்காப் படையினருடனும் தேசவிரோதக் கும்பல்களுடனும் எதிர்த்து நின்று சமர்புரிந்த போது, வீரச் சாவடைந்த இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்".

தொடர்ச்சி 10ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சோமாலியாவில் வழி தவறிச் செல்லும் ஐ.நா.படைகளின் அமைதிப் பணி

அமெரிக்க நாட்டுத் தலைவர் பில் கிளின்டனுக்கு இருக்கின்ற தொல்லைகள் போதாதென்று, இப்போது சோமாலியாச் சிக்கலும் சேர்ந்துள்ளது. அமெரிக்க மேலவையில், அமெரிக்க வீரர்கள் பாதுகாப்புத் தொடர்பாக, கிளின்டன் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும் எனக் கருதப்படுகின்றது. சோமாலியாவிலும், ஐ. நாவின் அமைதிப் படையின் ஒரணியாக இருக்கும் அமெரிக்கப்படை, அண்மையில் முதன் முறையாக நிலக்கண்ணி வெடித்தாக்குதலுக்கு உள்ளாக நேரிட்டு, நான்கு வீரர்கள் பலியாகிவிட்டனர். மொகடிசு, கீசுமாயு, பைடோவர் போன்ற நகரங்களில் மட்டுமே நிலை கொண்டுள்ள இப்படையணிகள், இனிமேல் வாகன அணிகளாக செல்வதில் உள்ள பேரிடரை (அபாயம்) -சோமாலியாவில் புதிதாகத் தொடங்கியுள்ள இக் கண்ணிவெடித் தாக்குதல் சம்பவம் உணர்த்தி நிற்கின்றது. இது மட்டுமன்றி, கடந்த ஆனி மாதம் 22 ஆம் திகதி 23 பாக் வீரர்கள் சோமாலிய குழு ஒன்றினால் கொல்லப்பட்டமைக்கான பதிலடி நடவடிக்கையாக, அமெரிக்கா நடாத்திய குண்டு வீச்சுக்கள் இன்று பலத்த கண்டனங்களைத் தோற்றுவித்துள்ளன. பொசுனியாவுக்கு ஒரு நீதி - சோமாலியாவுக்கு இன்னொரு நீதியா என்போர் ஒருபுறமிருக்க, குண்டு வீச்சின் பின்விளைவுகளால் தாமே முழுமையாகப் பாதிக்கப்படப் போவதாக, சோமாலியாவில் உள்ள மனிதாபிமான உதவி அமைப்புக்கள் தமது அச்சத்தைத் தெரிவிக்கின்றன. ஐ. நா. படையின் ஓரங்கமாக இருக்கும் இத்தாலி -இக்குண்டு வீச்சுக்களை உடன் நிறுத்துமாறு கோரி, இவற்றால் பொதுமக்களும் வெளிநாட்டவர்களுமே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளது.

இவ்வாறான நிகழ்ச்சிகளுக்கெல்லாம் காரணமாக குற்றம் சாட்டப்படுபவர், முன்னாள் சோமாலிய படை அதிகாரியான ஜெனரல் முகம்மது பாரா அய்டீட் என்பவரேயாவார். இன்றைய உலகச் செய்திகளின் நாயகனாகத் திகழும் இவர், உலக தொலைக் காட்சிகளில் தோன்றி, வீர வசனங்கள் பேசி, ஐ. நா. மற்றும் அமெரிக்கப்படைக்கு நாட்டைவிட்டு வெளியேறுமாறு எச்சரிக்கை விடுத்து, தன்னையொரு மூன்றாம் உலகத் தலைவராகக் காட்ட முற்படுகின்றார். அதே சமயம் இன்று ஐ. நாவால் தேடப்படும் முக்கியமான 'பயங்கரவாதி' என, இவர் மறுபக்கத்தில் காட்டப்படுகின்றார். எவ்வாறு இருந்தாலும், இவரது பழைய வரலாறு இவரது தற்போதைய நிலைக்குப் பெருமை சேர்ப்பதாக இல்லை. இவர் 1969 ஆம் ஆண்டு பதவிக்குவந்த மேஜர் ஜெனரல் சியாத் பாரே காலத்தில், படையில் இருந்த போதே, பாரே இவர் மீது ஐயம் கொண்டு சிறையில் அடைத்துள்ளார். அங்கு இவர், சில காலம் மனநோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றுள்ளார். பின் இவரது குழுவின் எதிர்ப்பைச் சம்பாதிக்க விரும்பாத சியாத் பாரே, இவரை தனது பாதுகாப்பு ஆலோசகராக நியமித்து, பின் வெளிநாட்டுத் தூதுவராக அனுப்பினார். அக்கால கட்டங்களில் இவரது வர்த்தக நடவடிக்கைகளும் மற்றும், இவரது மகள் போதைப்பொருள் கடத்தியமை என பல ஊழல்களில் இவரது பெயர் கெட்டுப்போயிற்று. பின் 1989 ஆம் ஆண்டு இவர் எதியோப்பியாவிற்குத் தப்பியோடி, அங்கு சியாத் பாரேக்கு எதிராகச் செயற்பட்டார். பின் 1991 ஆம் ஆண்டில் சியாத் பாரே நாட்டை விட்டோடிய பின்னர், மொகடிசுவுக்கு வந்து, சோமாலியாவிலேயே என்றும் உலகம் காணாத அழிவுகளுக்கு முதன்மைக் காரணமாக இருந்தார். இவரும் இன்னுமொரு குழுத் தலைவரான அலி மகாதி மொகமதுவும் தமக்குள் மோதியதன் மூலம், மொகடிசுவை தரைமட்டமாக்கி, சோமாலிய மக்களில் மூன்று இலட்சம் பேர் வரை கொன்றொழித்து, 20 இலட்சம் பேர்வரை ஏதிலிகள் (அகதி) ஆக்கி, இன்னும் அதேயளவு தொகையினரை பட்டினியின் விளிம்பில் சாவுக்குள் தள்ளிவிட்டுள்ளனர். (சோமாலியாவின் சனத்தொகை 60 இலட்சத்திலிருந்து 70 இலட்சம் வரை இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.) இதன் காரணம் பற்றியே சோமாலியாவுக்கு அனுப்பப்பட்ட உணவு நிவாரணங்களையும் ஏனைய உதவிகளையும் இவர்கள் கையிலிருந்து விடுவிப்பதற்காக, அங்கு UNOSOM எனப்படும் சோமாலியாவுக்கான ஐ. நா. நடவடிக்கை என்ற பெயரில் படைகள் அனுப்பப்பட்டன. (U. N. operations in Somalia)

பல்வேறு இனக்குழுக்கள் [இசாக் (Essag), தாருட் (Darod), கைவையி (Hawiye) மற்றும் டிர் (Dir)] இன்று முட்டி மோதி அழியும், சோமாலியா வரலாறு பெரும் துயரம் நிறைந்தது. 19 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியா, இத்தாலி கைகளில் சிக்கி சீரழிந்தது. இவர்கள், சோமாலிய மக்கள் பெரும்பா

**பாலகுமாரன்**

லானவர்களை கென்யா, எதியோப்பியா போன்ற நாடுகளுடன் இணைத்து விட்டமை, பிற்காலத்தில் பெரும் துயரங்களுக்குக் காரணமாகி விட்டது. பின் 1960 இல் விடுதலை பெற்ற போதும் குழப்பங்கள் தொடரவே, 1969 இல் சியாத் பாரே பதவிக்கு வந்து, தனி மனித ஆட்சி முறையை உருவாக்கி, அறிவியல் பொதுவுடமை அடிப்படையில் செயற்பட விரும்பினார். இதற்காக சோவியத் அணியின் ஆதரவைப் பெற்று, சோவியத்திற்கு இப்பகுதிகளில் காலூன்ற, புகழ்பெற்ற பார்பரா (Berbera) துறைமுகத்தை வழங்கினார்.

எதியோப்பியாவுடன் இருந்த, ஏசுடான் பகுதியை மீட்க முயன்றார். ஆனால், 1974 ஆம் ஆண்டு எதியோப்பியாவில் கேணல் மெங்குஸ்து கெய்லி மரியம் பதவிக்கு வந்தபின், சோவியத்தின் ஆதரவு அவருக்காயிற்று. அத்தோடு 1978 ஆம் ஆண்டு எதியோப்பிய -சோமாலிய மோதலில், சோமாலியா பெரும் தோல்வியும் கண்டது. எனினும், அமெரிக்கா இவர் பக்கம் சாய்ந்தது. இவ்வாறாக கிழக்கும் மேற்கும் சோமாலியாவில் குவித்த படைக்கலங்களே, இன்று முழுமையாக சோமாலியாவை அழிக்கப் பயன்படுகின்றன. தனது தேவைகள் முடிவடைய, வழமைபோல 1990 அளவில் சியாத் பாரேயை அமெரிக்கா கைவிட -வேறு வழியின்றி அவர் தப்பியோட -இன்று சோமாலியா அழிவின் விளிம்பில் நிற்பது பழைய கதை.



இப்போது சோமாலியாவில் அரங்கேறும் புதிய கதை இன்னும் குழப்பமானது. மனிதாபிமான உதவிகளைச் சீராக்கும் பணியில் ஈடுபடுவதற்காக, ஐ. நா. படை அங்கு சென்ற போது நம்பிக்கை ஏற்பட்டது. அத்தோடு அங்கு தரித்து நின்ற 37,-000 பலமான அமெரிக்கப்படையும், முரண்படும் இரு குழுத்தலைவர்களையும் ஒன்றாக்கி, சனநாயக வழிக்கு திருப்பி, சோமாலியாவை அமைதி வழியில் இட்டுச் செல்வர் என்றே நம்பப்பட்டது. ஆனால், இன்று நிலை வேறு. ஐ. நாவின் அமைதிப்படை இதுவரை என்றுமே, எங்குமே சந்தித்திராத ஒரு புதிய நெருக்கடி நிலைக்கு இன்று சோமாலியா முகம் கொடுக்கவேண்டியுள்ளது.

முதன் முறையாக ஐ. நா. யுனொசொம் 2 (UNOSOM 2) என்ற பெயரில் அமைதியை நிலைநாட்ட, படைக்கலப் பலத்தைப் பயன்படுத்த அதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மோதும் குழுக்களின் படைக்கலங்களைக் களையவும், தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தி, சோமாலியாவை ஒரு நாடாக்கி, அதற்கு ஆட்சி முறையொன்றை ஏற்படுத்த வேண்டிய நிலையில் இன்று ஐ. நா. அங்குள்ளது. இந்த ஆணையை ஐ. நா. எவ்வாறு நிறைவேற்றப்போகின்றது என்பதே இன்றைய சிக்கல் ஆகும்.

ஏனென்றால், இன்று ஏறத்தாள 27 அமைதி நடவடிக்கைகளில் ஐ. நா. ஈடுபட்டுள்ளது. இவற்றில் 14, 1988 ஆம் ஆண்டின் பின், அதாவது பனிப்போர் முடிவடைய மேற்கொள்ளப்பட்டவை. இன்றும் உடனடியாக 4, 5 நாடுகளில் நடவடிக்கைகளை ஐ. நா. மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றது. அதாவது, அமைதியை நிலைநாட்ட படை வலிமையை பயன்படுத்தும் தேவை வரவர அதிகரிக்கின்றது. ஏனெனில் ஐ. நா. முதன் முறையாக 1948 ஆம் ஆண்டு அரபுகளுக்கும் இசுரேலியர்களுக்கும் இடையில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டபோது, அது அனுப்பிய 224 பேரிடமும் படைக்கலம் இருக்கவில்லை. இன்று ஏறத்தாழ 75,000 ஐ. நா. வீரர்கள் (74 நாடுகளைச் சேர்ந்தவர்கள்.) உலகத்தின் தொல்லைகள் மிகுந்த பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதுவரை மொத்தம் 900 பேரை ஐ. நா. பலி கொடுத்தும் உள்ளது. இன்று வெறுமனே கண்காணிப்பில் ஈடுபட்டிருக்கின்ற, இந்திய -பாக் எல்லையில் உள்ள 38 வீரர்கள் ஒரு புறம் -அதேசமயம் சோமாலியாவில் உள்ள 16,000 கனரக படைக்கலம் தரித்த ஐ. நா. வீரர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் வேறு புறமுமாக இன்று ஐ. நா. உள்ளது. சோமாலியாவைப் பொறுத்த வரையில் அங்கு, இன்று அரசு என்று ஒன்றே இல்லை. வெளி உலகோடு தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலை. சுகாதார, மருத்துவ, குடிநீர் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் எதுவுமே இல்லை. இத்தகைய நிலையில், எவ்வித சருவதேச விதிகளை மதிக்க வேண்டும் என்கிற கடப்பாடு இல்லாத, படைக்கலக் (ஆயுதம்) குழுக்களோடு மோத வேண்டிய நிலையில் ஐ. நா. உள்ளது. இதன் காரணம் பற்றியே இன்று ஐ. நாவின் அமைதிப்பணி விவாதத்திற்கும் நீண்ட ஆய்விற்கும் உட்படுத்த வேண்டிய நிலையில் உள்ளதாகக் கருதப்படுகின்றது.

தெளிவான கோட்பாடுகள், விதிமுறைகள் இல்லாத நிலையில் சோமாலியாவில் ஐ. நா. வழிதவறிப் போகின்றதோ என்ற கேள்வியும் இன்று எழுப்பப்பட்டுள்ளது. அமைதியையும் இணக்கத்தையும் உருவாக்க வேண்டியிருப்பதற்குப் பதிலாக, மென்மேலும் அதிகரிக்கப் போகும் வன்முறைகட்கு ஐ. நா. வகை செய்கின்றதோ என்ற சந்தேகமும் இன்று கிளப்பப்பட்டுள்ளது. ஐ. நாவிற்கு சோமாலியாவில் உள்ள இனக்குழுக்கள் பற்றிய போதிய அறிவில்லை எனக் குறையும் கூறப்படுகின்றது.

"சோமாலியாவில் இப்போது ஐ. நாவிற்குத் தேவை -இப்படியான இனக் குழுத் தலைவர்களோடு ஒன்றாக இருந்து கலந்து பேசி முடிவைக் காண்பதேயன்றிப், பாரிய படைக்கலங்கள் அல்ல" என்கிறார் கெனியாவில் உள்ள முன்னாள் சோமாலியத் தூதுவர். ஏனென்றால் அய்டீட் போன்றோர் எத்தகையவராக இருந்தாலும், அவர்களைத் தண்டிக்க முற்படுவது பெரும் சிக்கலிலேயே போய் முடியும். ஏனென்றால், இவர் சார்ந்த இனக் குழுவினர் இவருக்கே தமது முழுமையான ஆதரவை அளிப்பர் என்பதை, ஐ. நா. மறக்கக் கூடாது என இவர் மேலும் கூறுகிறார். அத்தோடு சோமாலியாவில் எதற்குப் பஞ்சம் இருந்தாலும் படைக்கலங்களுக்குப் பஞ்சம் இல்லை. பல்வேறு குழுக்கள் நகரங்களை விட்டு மறைந்து சென்று, காலம் வரும் எனக் காத்திருக்கின்றனர். எனவே அய்டீட்டின் குழுவினரின் படைக்கலங்களை மட்டும் களைந்தால் பிரச்சினை தீராது. எல்லாத் தரப்பினரதும் படைக்கலங்களையும் களைய வேண்டும். இதை எவ்வாறு ஐ. நா. செய்யப் போகின்றது என்பதே இன்றைய கேள்வி. ஐ. நாவே இது பற்றி தெளிவாக இல்லை. இவ்வாறாக ஐ. நா. சோமாலியாவில் எதிர்நோக்கும் புதிய சூழல், புதிய வழி முறைகளை, திட்டங்களை வகுக்க வேண்டிய அவசியத்தையே இன்று உணர்த்தி நிற்பதாக கருதப்படுகின்றது.

இவை ஒரு புறமிருக்க, விரிவடையும் அமைதிப்பணிகளுக்கு ஈடுசெய்ய பெருமளவு செல்வம்

தொடர்ச்சி 12ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மணலாற்றிலிருந்து மாங்குளம் முகாம் தகர்ப்பு வரை

## மாவீரன் கப்டன் மலரவன் (லியோ) எழுதிய வரிகள்

"எங்கட மாமாவை, பெரியப்புவை ஏன் சுட்டவங்கள்?"

"குஞ்சுவுக்கு ஆர் சொன்னது அவன்கள் சுட்டதென்று?"

"நான் சின்னனா அம்மாவின்ர மடியில இருக்கேக்கை வீட்டுக்குள் வந்து சுட்டவங்களாம். அம்மாவின்ர கையிலையும் காயம்."

- இவை மாவீரன் மலரவன் (லியோ) கையெழுத்துப் பிரதியாய் விட்டுச் சென்றுள்ள, அவன் பங்கு கொண்ட போராட்ட நிகழ்வுகளின் வரிகளே. போர் ஒலிகளும் அவை தொடர்பான நினைவுகளும் இங்கு இடம்பெற்று, அவை மணலாற்றிலிருந்து மாங்குளம் முகாம் தகர்ப்பு வரையிலான இலட்சியப் பயணத்தில் ஆழ்ந்து செல்கின்றன.

இவை ஒரு தனி மனிதனின் சுயசரிதை அல்ல. முப்பதிற்கும் மேலான சகபோராளிகளின் உறவும் நினைவும் இங்கு எமக்குக் கிடைக்கின்றது. கரும்புலி லெப். கேணல் போர்க்கிலிருந்து பல பொறுப்பாளர்கள் வந்து கலக்கின்றனர். பொதுமக்களின் அன்பும், ஆதரவும் அவர்களது பங்களிப்பும் நெஞ்சை நெகிழ்த்து கின்றன. அழிக்கப்பட்ட கிராமங்களின் அவலக் காட்சிகளும் ஒருபுறம்.

இனி இராணுவ அரக்கர் மாங்குளம் முகாமில் செய்த கொடுமையை சகபோராளி இதயன் மூலம் கேட்போம் -

"நான் பார்த்தன், முகாமுக்குள் முள்ளுக் கம்பியை நிலத்துக்கு மேலே அரையடி உயரத்தில் அடித்து முள்ளுக்கு மேலே ஒரு பெடியனைக் குப்புறக் கிடத்தி கட்டி வைத்திருந்தார்கள். கொஞ்சத்தில மச்சான், ஏழெட்டுப் பேர் வந்தான்கள். ஒருவன் பெடியனின் முதுகில் ஏறிச் சவாரிவிட்டான். பெடியன் கத்தின சத்தம் கேட்கேலாது. பின்னர் நெத்தியில பிடிச்சு ஒரேயடியா மேலே இழுத்துவிட்டான். - "அம்மா" என்ற சத்தம் அரைகுறையாகக் கேட்டுது. கழுத்து முறிஞ்சு கிடந்தான். பிறகு ஆடவே இல்லை. கம்பிக்கு கீழாலை இரத்தம் சொட்டுச் சொட்டாக ஊத்திச்சு."

இன்னொரு இடத்தில் போராளிகளின் பிரயாண இன்னல்களும், இடையே ஏற்படும் கோர ஆபத்துக்களும் கண்முன் வருகின்றன. அவ்வித ஓர் இளம் தென்றலின் ஓய்வு இது -

"ரைக்டரை ஓட்டி வந்த சலாம் திடீரெனக் கத்தினான், 'பின்னால குதியுங்கோடா: ஸ்ரேறிங் றொட் உடைஞ்சு போச்சுது' என்று. நான் (லியோ) ஒரே தாவலாகத் தாவினேன். அப்படியே குரல் கொடுத்தேன். 'டேய் வசந் குதியடா! அடிபடப்போகுது!' அது காட்டுக் கத்தலாய் அதிர்ந்தது. ஒருதுளி இரத்தம் என்னில் தெறித்தது. அந்த குமுழமுனை வீதி வளைவிலிருந்த நாவல் மரத்தில் மோதி பெட்டி புரண்டு கவிழ்ந்து கிடந்தது. சலாமும் இதயனும் இரும்புச் சனியனில் அகப்பட்ட வசந்தனை -அந்த் தோழனை -உயிர் நண்பனை -மீட்டெடுக்கப் போராடினர்..."

இந்த இலட்சியப் பயணத்திலே துன்பங்கள் இன்பமாகின்றன. பகிர்ந்துகொள்ளும் சகோதர உணர்வு அனைத்துக்கும் உயிரோட்டம் ஆகின்றது. இதற்கு இந்தச் சிறு சம்பவம் சான்று -

"இராப்பறவைகள் இடைவிடையே பறந்துகொண்டிருந்தன. குளிர் உடலைச் சில்லிட வைத்தது. 'மாஸ்டர் சரியாய்க் குளிருது. என்ன செய்யலாம்?' என அழகு கேட்டான்.

'அப்பனுக்கு குளிருதோ? ஒன்று செய்யன். அந்தச் சவளாலை மண்ணைத் தோண்டு. நான் உன்ர முஞ்சியை மட்டும் வெளியில விட்டுத் தாட்டுவிடுகிறன்."

இவ்விதம் கஸ்டங்களெல்லாம் அங்கு கேலியாக மாற்றப்படுகின்றன!

**"We can expect another Janakapura, another attack on another navy boat in the next three months."** *- Sinhala Sri Lanka Prime Minister Ranil Wickremasinghe*

adhoc and slipshod. With all this the political structure succeeds in erecting an artificial atmosphere that all is well... I do not think the government has a strategy at this stage to solve these problems. The coming year is election year. What is possible is to make readjustments in the hierarchy of priorities."

**Informed sources say that foreign aid donors are increasingly sceptical about assertions that stability in the coming election year will come from so called 'readjustments in the hierarchy of priorities' - Sinhala chauvinism's euphemism for allocating all resources to an all out effort to quell Tamil resistance.** They are well aware of the fate of ex President J.R. Jayarwardene's grandiloquent order to the Army Commander in June 1979 to quell Tamil resistance in six months! 14 years later Tamil resistance has grown to such proportions that the Sri Lankan Government's writ does not run in the North and with difficulty and intermittently in the East.

**The hard political reality is that stability will not come to the island without justice and justice demands that the Sri Lanka government recognises the Tamil struggle for self determination, sit and talk with the leaders of that struggle, the Liberation Tigers of Tamil Eelam and structure a polity where both the Tamil people and the Sinhala people may freely associate with each other on equal terms.**


## World Tamil Cricket Tournament 1994

at Warren Farm Sports Centre
Windmill Lane, Southall, London
commencing Saturday 2 July 1994

Teams from Australia, Canada, U.K. and other EEC countries will participate.
Entry fee: £35 per team

Contact for further information:
Dr.T.Theivendra - (O) 081 342 0330 (E) 081 366 5137;
Mr.S.Mylvaganam (Myl)-081-366 5137;
Mr.N.Navaneetharajah (Navanee) - 081 646 4664;
Mr.T.Naveenathayalan (Thayalan) - 081 578 3807


# Comment

## Irritants to calibration

**The celebrated calibrated approach of Indian Foreign Secretary Dixit to New Delhi-US Relations has engrossed diplomatic observers during the past year or so. During a visit to Cambridge University in July, Foreign Secretary Dixit speaking to reporters, put it rather bluntly: "Anybody with any comprehension of the context, nature and substance of US-Pakistan relations will know that US is not likely to declare Pakistan a terrorist state."** Dixit went on to describe this 'nature and substance' as the cosy relationship between the Pentagon and Pakistani armed forces, the rapport between the Pakistani and American intelligence agencies, and the American perception of Pakistan as a geostrategic entity in the Gulf that could be essential for American interests.

**From the US side, a recent study undertaken by the in house US Congress think tank (the Congress Research Service) says that the biggest burden that impinges on ties between Washington and Delhi is the 'long standing India-Pakistan regional rivalry'. (A New Delhi insider remarked: 'But then, they would say that, would'nt they?)** The CRS Report which was released this month notes that US and Congressional attitudes have been particularly affected by the 'deepening bitterness in ties between India and Pakistan over the Kashmir dispute and the ongoing Indian preoccupation with China as a long standing source of strategic threat.' It notes that the human rights situation in Kashmir had worsened since late 1992 and that several international human rights groups have 'cited Indian security forces for escalating the level of violence in 1993, including firing on demonstrators, burning large sections of the towns of Srinagar and Sopore and allegedly killing several prominent Kashmiri human rights activists.' The Report was written by Barbara Leitch Lopoer, a South Asia specialist in the CRS's foreign affairs and national defence unit. The CRS functions under statutory charter and works exclusively as a research arm for Congress members and committees to support their legislative and other functions.

**The CRS Report says that the end of the bipolar world has made India's 'traditional, though often symbolic, role as a leader of the non aligned world essentially obsolete.' Compounding these developments have been 'rivalries with neighbours, separatist tendencies and sectarian tensions' which continue to 'divert attention and resources from basic needs of economic and social development.' Consequently, the Report notes, 'fall out from these unresolved problems-particularly nuclear arms proliferation and human rights issues-present serious irritants in US - Indian relations.'.**

Significantly, the Report points out that the heads of Russia, Germany and Britain, who visited Delhi in early 1993, called upon India to sign the Nuclear Non proliferation Treaty and to scale back its military spending. Meanwhile the study adds 'Japan which is the largest aid donor for both India and Pakistan' announced stricter foreign aid guidelines, 'particularly for countries that engage in excessive military spending and questionable nuclear activities.' **Meanwhile, it is reported that the third round of the long delayed nuclear talks between India and US scheduled for mid September will be 'testy'. Apparently as a softening up process, it has been put about, that State Department officials have been irritated by Delhi's recent anti-US rhetoric, judged 'harsh by even Indian standards.' Foreign Secretary Dixit may not be amused.**

## First knock on the door?

**The usually knowedgeable Lanka Guardian editor, Mervyn de Silva's comment (in the 15 August issue) on the Peace Plan of the four Nobel Prize winners was intriguing for two matters:** Firstly for the headline under which the comment appeared: "Intervention: First knock on the door" - the pregnant suggestion was that other knocks may follow. Secondly for Mervyn's advice that the Peace Plan and the "meeting with Secretary General Boutros Ghali should be studied along with the recent CIA projection of a 50 million dollar operation in Sri Lanka which would involve a 5,000 strong peace keeping force". Kite flying is always an absorbing past time - whether Delhi found this particular kite of interest is another matter.

www.tamilarangam.net

# INSIDE REPORT
## Tamil Eelam News Round-Up

### Sinhala POW exchange - the FACTS

In June this year, some Sinhala prisoners of war, in LTTE custody since 1990, began a fast unto death demanding that the Sri Lanka Government negotiate with the LTTE and obtain their release. The Sri Lanka Government's initial response was silence. After the fast had lasted for about a week, and relatives of the Sinhala prisoners had visited them in Jaffna, and when the prisoners were in a critical state, the Government sent Brigadier Ananda Weerasekera to Jaffna to negotiate with the LTTE. The LTTE told him that it would exchange 39 Sinhala prisoners of war for 39 Tamil prisoners of war and requested him to give a list of the Tamil prisoners of war held by the Government. But Brigadier Weerasekera said that the Government was not willing to hand over a list of prisoners because that was a defence secret.

**Sinhala prisoners of war are held by LTTE in accordance with international humanitarian law. They are presented to the ICRC. But the whereabouts of the Tamil prisoners of war are not known. The ICRC does not visit the Tamils held by the Government as prisoners of war. Exchange of prisoners of war is an international norm. But the Sri Lanka Government refused to recognise this.** Faced with this refusal, the LTTE requested Sri Lanka to lift the economic blockade to the North in return for the release of the prisoners. It was thereafter agreed that the embargo would be lifted on certain specified items. Brigadier Weerasekera went back to Colombo for discussions. He returned to Jaffna and confirmed the Sri Lankan Government's decision to lift the embargo on the agreed items and handed over a copy of the Government Gazette notification removing the ban on the items in question.

As a settlement was reached, the LTTE forthwith released 5 of the prisoners and wanted the Government to send to Jaffna the 'unbanned' goods, before the release of the remainder. Though the Government had loaded some of these goods on a ship which left Colombo harbour for Point Pedro, before the goods arrived at Point Pedro harbour, the Government later ordered the ship not to proceed to Point Pedro and directed it to go to Kankesanturai which was manned by the Sri Lanka armed forces. It was said that it was the Sri Lankan army which had led the opposition to the agreement from within the Sri Lankan Government ranks. It was in these circumstances, that the LTTE refused to hand over the remaining Sinhala prisoners of war.

The government however, alleged falsely that the LTTE had made new demands. But, its own Brigadier Weerasekera denied that the LTTE had made any new demands. The state controlled Sri Lanka media later questioned the role of the International Red Cross in the negotiations. The fact was that the talks were between the Sri Lanka government and the LTTE. The ICRC merely facilitated the talks. For instance, due to the lack of telecommunication links between Colombo and Jaffna, at times Brigadier Weerasekera used the services of the ICRC to convey messages.

**Sri Lanka seems intent on getting rid of the ICRC from the North-East and the extent to which it is prepared to go was underlined by the attack published recently in the state controlled Sunday Observer. (see below)**

### Red Cross denounces allegation of so called 'University of Jaffna Teachers Group for Human Rights' as 'absurd'

**Mr. Pete Switcher, the Resident Representative of ICRC in Jaffna has denounced as "absurd" the report in the Sri Lanka State controlled Observer that the reliability of the ICRC had become doubtful and that the LTTE had infiltrated into it.**

The Observer report carried the allegation of the so called 'University of Jaffna Teachers Group for Human Rights' that: "The reliability of the ICRC has become something to be doubted and the LTTE too had infiltrated into it. Therefore we have to look at the ICRC from a different angle. All the expectations and reliance placed on it have now become untenable as it had not acted as a straightforward intermediary with regard to the entanglement between the Sri Lanka government and the LTTE."

**Mr.Pete Switcher described the allegation of the so called 'University of Jaffna Teachers Group for Human Rights' as "complete nonsense".**

This latest instance of the efforts of the so called 'University of Jaffna Teachers Group for Human Rights' and the wide publicity given to its pronouncements in Sri Lanka's state controlled press suggests that the 'University of Jaffna Teachers Group for Human Rights' is a quisling body which is being used by the Sri Lanka government to undermine the Tamil struggle for self determination.

In the same way as the Sri Lanka government has used Tamil quislings on the ground as intelligence gatherers and as a para military support force for the Sri Lanka army, it appears that the Sri Lanka government has also mobilised disgruntled sections of the so called Tamil intelligentsia as a 'Human Rights' support force for its diplomatic offensive against the Tamil struggle. The Group seeks to give authenticity to its allegations by passing off as the 'University of Jaffna Teachers Group for Human Rights' - a label which is patently false. A few months ago, the Vice Chancellor of the University of Jaffna stated in no uncertain terms that no such 'Group for Human Rights' exists in the University. **To seek anonymity is one thing - to attempt to give legitimacy to its pronouncements by using a false and misleading pseudonym is quite another. People, they say, prevaricate when they have something to cover up. What does the so called 'University of Jaffna Teachers Group for Human Rights' seek to cover up - its connections with the Sri Lanka intelligence services?**

**Ana Pararajasingham reports from Sydney**

## Australasian Tamils call for arms embargo

**Representatives of the Australasian Federation of Tamils met with Mr. Andrew Peacock, the Shadow Minister for Foreign Affairs at Canberra on 6 September, having met Australian Foreign Affairs Departmental officials earlier.**

The Tamil delegation urged that Australia recognise the Tamil's right to self determination. They urged that Australia should take stronger measures to persuade Sri Lanka to talk directly with the Liberation Tigers of Tamil Eelam. Such measures could include the use of diplomatic and economic sanctions, imposition of an arms embargo and direct humanitarian assistance to the beleaguered Tamil nation. The delegation suggested that Australia should invite representatives of the LTTE and hear their views in respect of a negotiated political settlement.

## Thilagar-Thonda meeting

*continued from front page*

**He said: "I am in a very difficult situation. I cannot take sides. If I ask the government to settle it, the government will feel I want them to hand over a part of the country to the Tamils, and if I request the LTTE to stop the fighting and accept some sort of devolution, the Tamils will say that this fellow is asking us to stop when we are about to win what we want. What can I do?"**

### 'Only LTTE & Govt can deliver the goods'

In a later interview reported in the Sinhala owned Sri Lanka Sunday Times on 5 September, Mr.Thondaman referring to a meeting with Tamil expatriates in London said: **'I expressed my opinion that the only parties concerned in finding a solution to the North-East problem were the Government on the one side, and the LTTE on the other... I believe that no other group can deliver the goods. After all what have they all done so far?... In these matters I am speaking as the President of the CWC. I am speaking also as a Tamil"**

## Quisling at UN Sub-Commission

**Quisling DPLF (ex PLOTE) frontman, Dharmalingam Sithadthan surfaced in Geneva in August to canvas support for the Sri Lanka government amongst delegates at the UN Sub Commission sessions.** The state controlled Sri Lanka Sunday Observer dutifully gave wide publicity to his 'efforts' in Geneva. Some NGO circles in Geneva were openly laughing at the Sunday Observer report of 22 August that Quisling Sithadthan, had 'addressed the UN Sub Commission'. To their knowledge, he had done nothing of the kind. **His comment as reported by fellow ex PLOTE man, now turned journalist Taraki, in the Sinhala owned press was revealing. Said he: "...the Tigers rarely miss any forum where they can lobby their cause through propaganda and argument. The Sri Lanka diplomatic corps is in no position to match their work in terms of propaganda output and organising." The message was clear: 'So, send me again to Geneva to do the needful'!**

## A VIEW FROM THE ENEMY'S CAMP

**"With the national political parties continuing to grope in the dark on how to approach the ethnic issue, the Liberation Tigers of Tamil Eelam once again seized the opportunity to confound their adversaries by calling for a negotiated political settlement.... The Government itself has been at sixes and sevens in the recent past in coming to grips with the issue, not only because it has failed to arrive at a consensus or a package of devolution to end the conflict but also due to the string of military set backs it has suffered with very little, if any, success to show in return...The ongoing war with little headway being made is not only bleeding the human resources of the country but also the economy which could only portend additional problems in the months to come..."** - *Political Correspondent of the Sinhala controlled Sri Lanka Sunday Times, 5 September 1993*

## Democracy continues - in Sri Lankan style

"In a recent Supreme Court judgment in a fundamental rights case, the Court while upholding the petitioner's complaint that she had been unlawfully arrested and detained at the Seeduwa Police Station on a false charge of theft criticised the police for the 'high incidence of unjustifiable arrest and detention of persons' at police stations. **The Court observed that despite several judgments reprimanding the police 'over and over again, the incidence of unjustifiable arrests and detentions continue at police stations'** and it was time that the Inspector General of Police took steps to arrest this trend." - *Reported in the Sinhala owned Sri Lanka Sunday Island, 5 September 1993*

**"Although President D.B.Wijetunge came from the upcountry, he had been raising his hands for the last 16 years in support of the murderous UNP regime... People like that could not be trusted"** - *SLFP Chief Minister of Western Province, Ms.Chandrika Kumranatunge reported in Sri Lanka state controlled Sunday Observer, 5 September 1993*

"...I was ripped of my civic rights..The UNP tried all tricks to oust me .. J.R. was afraid of me. Premadasa tried his best to do the same.. **I am not scared of any threats on my life. In fact attempts were made on my life on three occasions..."** *Mrs. Srimavo Bandaranaike, Leader of the Sinhala Opposition SLFP at Public Meeting near Kandy on Friday, 3 September 1993.*

## Book Release

# INDICTMENT AGAINST SRI LANKA

The gross, systematic and continuing violations of the rights of the Tamil people, by the Sri Lankan government and its agencies, have been well documented by innumerable reports of human rights organisations and independent observers of the Sri Lankan scene.

**The Legal and Human Rights Division of the International Secretariat of the Liberation Tigers of Tamil Eelam has brought together extracts from some of these reports in a publication entitled "Indictment against Sri Lanka". The book is priced at £10 (inclusive of postage), and is available for purchase by mail order from IFT, 17, Birchview Close, Yateley, Camberley, Surrey GU17 7DL**

This 126 page book is an invaluable addition to the armoury of all human rights activists engaged in furthering the Tamil cause - a cause which was described by one such activist in 1984 as being 'the very essence of the cause of human rights and justice'.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீர வணக்கம்



கடற் கரும்புலி

## மேஜர் புவீந்திரன் / புகழரசன்



கடற் கரும்புலி

## கப்டன் மணியரசன்

**பருத்தித்துறைக் கடலில் எதிரியின் பீரங்கிப் படகைப் பிளந்து புதுவரலாறு எழுதிய கடற் கரும்புலிகள் இவர்கள்**

நிலத்திலும் வெல்வோம், நீரிலும் வெல்வோம்
நீலவான் பரப்பிலும் வெல்வோம்.
களத்திலும் வெல்வோம், கரும்புலி யாகிக்
கடலிலும் பகைவரைக் கொல்வோம்,
வளர்த்தவன் தலைவன், வந்துபார் இனிமேல்..
வரிப்புலி கரும்புலி அறிவாய்.
விலத்திடு, மண்ணை விட்டுநீ ஓடு
விளங்கிட வில்லையேல் அழிவாய்.

பருத்தித் துறையதின் திசையினில் திரும்பி
பாடுக, பாடி ஆடடா தமிழா!
உருத்தெரியாமலே.. வெடித்தயிப் புலிகளை
உலகெலாம் கேட்டிட வாழ்த்தடா தமிழா!
கருத்தரித் திட்ட தாயரைத் தேடிக்
கால்களில் விழுந்து வணங்கடா தமிழா!
விரித்திட முடியா வீரராய் வளர்த்த
வியத்தகு தலைவனைப் போற்றடா தமிழா!

கண்ணின் மணிகளே! கரும்புலி வீரரே!
காவியமான நம் தோழரே!
உண்ணும் போதும் உங்களை நினைப்போம்
உறங்கும் போதிலும் மறவோம்.
கண்ணில் வழியும் நீரைத் துடைப்போம்
கரும்புலி யாகியே நடப்போம்,
விண்ணினில் நீங்கள் வெடித்த அதிர்வுகள்
வெல்லும் வரையினித் தொடரும்,

வாடா பகைவா! வந்துபார் எங்கள்
வாசலிலுனக்குப் புதைகுழி அறிவாய்
ஏடா பகைவா! புலிகளை எதிர்த்தால்
எப்படி என்பதை இன்றறிந் தாயா?
போடா! உனக்குயிர் பிச்சைகள் தந்தோம்
புலிகளை வென்றிட வந்த
"டோரா" எங்கே? கடற்புலி ஆடிய
வீரத்தில் வீழ்ந்தது அங்கே,



Liberation Tigers Of TAMIL EELAM

தமிழீழ
விடுதலைப் புலிகள்

"புலிகளின் தாகம்
தமிழீழத் தாயகம்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# போராளியின் குருதிச்சுவடுகள்

சிவகுமாரின் சுபாவம் இப்படித்தான் அமைந்திருந்தது. அயலில் உள்ளவர்கள் யாராவது, "தம்பி, ஒருக்கா கடைக்குப் போட்டு வாறியே"? -"ஓம்". காசையும் பையையும் வாங்கிக் கொண்டு புறப்பட்டு விடுவான். தெருவில் யாராவது ஒருவர் விபத்தில் சிக்கினாலோ, யாரும் விழுந்து கிடந்தாலோ அந்த இடத்தில் அவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சையளிப்பதுடன் மட்டும் நின்று விடுவதில்லை. அவர்களைக் கொண்டுபோய் வீட்டில் ஒப்படைப்பதுவரை தானே நின்று செய்தால்தான் இவனுக்குத் திருப்தி.

இவன் மிகவும் அமைதியானவன். குடும்பத்தில்கூட, யாரையுமே தனக்காகச் சிரமப்படுத்த இவன் விரும்புவதில்லை. இப்படியான இவனுக்குள் பின்னாளில் ஒரு பூகம்பமே கிளர்ந்தெழும் என்று, யாருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

சரித்திரக் கதைகளைப் படிப்பதில் இவனுக்கு ஆர்வம் மிகுதி. 'தமிழரின் பெருமை எத்தகையது, தமிழரின் வீரம், புகழ் எங்கெல்லாம் பரவியிருந்தது..... இன்று ஏன் இப்படி.....?இந்த நிலைமையை மாற்றியமைக்கும் காலம் பிறந்துள்ளது. அதில் நிச்சயம் நானும் ஒரு பங்காளனாய்.....' இவ்வாறாக அவன் மனது அடித்துக் கூறியது. எண்ணங்கள் செயலை நோக்கித் தள்ளின. ஓட்டமென்றும் நீச்சலென்றும் தன்னைத் தயார்படுத்தி வந்தான் இவன்.

1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரம் இந்தப் பூவைப் புயலாக மாற்றியது. தேடித்திரிந்தான் விடுதலைப் புலிகளைச் சந்திக்க. இவனது சொந்த இடம் தெல்லிப்பழை. அந்தக் காலத்தில் தடுக்கி விழுவதானால்கூட ஒரு 'புளொட்' உறுப்பினரின் மேல்தான் விழவேண்டும். அப்படியான நிலைமை இருந்தது தெல்லிப்பழையில். "உம்" என்று சொன்னால், படகுகளில் ஏற்றிக்கொண்டு இந்தியாவுக்குச் செல்ல எத்தனையோ இயக்கங்கள். ஆனாலும் இவனுக்குச் சம்மதமில்லை. வடிகட்டல் முறையில் போராளிகளை உள்வாங்கும் விடுதலைப் புலிகளை மட்டுமே பிடித்திருந்தது.

இவனுக்கும் மற்றும் சில நண்பர்களுக்கும் விடுதலைப் புலிகளின் தொடர்பும் கிடைத்தாயிற்று. எனினும், உள்வாங்குவதில் சலிக்க வைக்கும் தாமதம்; தரப்படும் வேலைகளோ யானைப் பசிக்கு சோளன்பொரி போல. "எங்களாலும் நிறைய சாதிக்க முடியும் -அதுவும் இப்போதே" - தீர்மானித்துவிட்டார்கள் அவர்கள். எங்கெங்கோ திரிந்து 'டைனமைற்' றுக்குத் திரி வைத்து (பைப்பில்) குண்டுகள் செய்வது முதல், மேலும் சில விசயங்களைத் தெரிந்துகொண்டார்கள்.

1984 ஆம் ஆண்டு - காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலையில், வெடிப்பொருள்களுக்குப் பாதுகாப்பாகச் சென்றுகொண்டிருந்தனர் காவலர்கள். அவர்களிடம் 4 றிப்பீற்றர் துப்பாக்கிகளும் இருந்தன. அவற்றினையும் வெடிப்பொருட்களை வெடிக்கவைக்கும் கருவியையும் கைப்பற்றுவதற்காய் சிவகுமாரும் நண்பர்களும் காத்திருந்தனர். இவர்களிடம் இருந்ததோ ஒரேயொரு வேட்டைத் துப்பாக்கி -சில கைக்குண்டுகள் (கொளுத்தி எறிபவை).

'ஜீப்' மறிக்கப்பட்டது. கைக்குண்டுடன் சிவகுமார் -ஒருவன் துப்பாக்கியுடன் -மற்றவர்கள் பின்னால். நான்கு காவலர்களும் கைகளை உயர்த்திவிட்டனர். நான்கு றிப்பீற்றர்களும் இவர்கள் வசமாயிற்று. எக்ஸ்புளோடரையும் மற்றும் பொருட்களையும் கைப்பற்றிக் கொண்டு ஜீப்பிலே திரும்பிவிட்டனர்.

இயக்கத்துடன் தொடர்புள்ளவர்கள் இயக்கக் கட்டுப்பாட்டை மீறிச் சுயமாக நடந்துள்ளார்கள். தவறுதான் ஆனால், இவர்களை நெறிப்படுத்த முடியும், அப்போது யாழ். மாவட்டத் தளபதியாக இருந்த கேணல் கிட்டு அவர்கள் இவ்வாறு தீர்மானித்தார்.

ஒரு விடயத்தில் வெற்றி - அது அவர்களை உற்சாகப்படுத்தியது. மேலும் கைக்குண்டுகளைச் செய்தனர். அப்போது எதிர்பாராதவிதமாக கைக்குண்டு வெடித்தது. சிவகுமாரின் உடலெங்கும் பாரதூரமான காயம் - நெஞ்சுப் பகுதியைப் பார்க்கப் பயங்கரமாக இருந்தது. இப்படியொரு நிலை வருமென்று எவருமே எதிர்பார்க்கவில்லை. சுமார் இருபது நாட்கள் -அதை இருபது வருடங்கள் என்றுகூடச் சொல்லலாம். அப்படியான வேதனைகளை இவன் அனுபவித்தான். இவனது அண்ணன்தான் இப்போது இவனைப் பராமரித்து வந்தார். படையினரின் முற்றுகைகள் நிகழும்போது, தம்பியைத் தூக்கிக் கொண்டு ஓடுவதும். வைத்தியம் செய்வதுமாக இந்த இருபது நாட்களும் கடந்தன. "இயக்கத்திற்குக் கட்டுப்படாமல் நடந்ததால், இயக்கம் இவனைப் பொறுப்பெடுக்க மாட்டாது" என்று ஊரில் கதை உலாவியது, அப்படியானால் இவன் கதி.....? அச்சத்துடன் கடந்தன அந்த நாட்கள்.

விசயத்தைக் கேள்விப்பட்டார் கேணல் கிட்டு . "அவன் இயக்கமில்லையெண்டு ஆர் சொன்னது? அவன் இயக்கந்தான்" என்றபடியே அவனை நோக்கி விரைந்தார் அவர். அப்போதுதான் உயிரே வந்தது அவனை நேசித்தவர்களுக்கு. அவனது நிலமையைப் பார்த்ததும், "ஏன் இந்த வேலை? என்னட்டக் கேட்டிருந்தா திறமான குண்டுகள் தந்திருப்பனே....." என்று கூறி, அவனது பயத்தைப் போக்கி, உற்சாகப்படுத்தினார். வைத்தியத்திற்காக சிவகுமார் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டான். அங்குதான் அவன் அபயன் ஆனான். அவனுக்குப் பிடித்தமான 'பொன்னியின் செல்வன்' நாவலில் வரும் ஒரு பாத்திரம்தான் அபயன்.

மருத்துவத்தை எதிர்பார்த்துத் தமிழகம் சென்ற இவன், பிறருக்கு மருத்துவம் செய்யக்கூடியவனாக இந்த மண்ணிற்குத் திரும்பினான். இவனது சேவையை மட்டக்களப்பு -அம்பாறைப் பிராந்தியம் எதிர்பார்த்தது. 1987 ஆம் ஆண்டு சித்திரை மாதமளவில் இவன் மட்டக்களப்பு மண்ணில் கால்வைத்தான். அன்றிலிருந்து, 1992 ஆம் ஆண்டின் இறுதியில் வீரச்சாவடையும் வரை, மட்டக்களப்புப் பிராந்தியத்திலேயே இவன் பணிபுரிந்தான்.

மட்டக்களப்பில் இவனது முதல் அனுபவம் மறக்கமுடியாததாக இருந்தது. சிவத்தப்பாலம் என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்த எமது அலுவலகத்தின் கீழ், ஏற்கனவே தீர்மானித்தபடி கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. ஒரு நாள் காலை 5.00 மணியளவில் முறக்கொட்டாஞ்சேனை, ஏறாவூர், கரடியனாறு ஆகிய மூன்று முகாம்களிலிருந்தும் புறப்பட்ட சிறீலங்காப் படையினர், இந்த அலுவலகத்தை முற்றுகையிட -விரைந்தனர். இந்த முற்றுகையிலிருந்து போராளிகள் தப்பமுடியாதவாறு, பொத்தானை என்ற இடத்தில் உலங்குவானூர்தி மூலம் படையினர் இறக்கப்பட்டிருந்தனர். சண்டை தொடங்கியது அலுவலகத்தை விட்டுப் போராளிகள் பின்வாங்கினர். வெற்றிகரமான முற்றுகை என நினைத்தவாறே படையினர் அலுவலகத்தைக் கைப்பற்றினர். இதேவேளை உலங்குவானூர்தி மூலம் இறக்கப்பட்ட படையினர் எமது முற்றுகைக்குள்ளாகினர். அங்கிருந்து அவர்கள் தப்புவதே பெரும் போராட்டமாகியது. பகல் 11.30 மணியளவில், எமது அலுவலகத்தினுள் இருந்த கண்ணிவெடி வெடிக்கவைக்கப்பட்டது. அலுவலகம் தரைமட்டமாகியது. அதற்குள் தங்கியிருந்த விசேட அதிரடிப்படையின் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்ரர் கருணரத்னவும் மேலும் மூன்று படையினரும் பலியாகினர். இத்தாக்குதலில் கலந்து கொண்டவர்களில் அபயனும் ஒருவன். இம் முற்றுகைக்கு வந்த இன்னொரு அணியினர் மீதும் கண்ணிவெடித் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. சிறீலங்காப் படையினரது திட்டங்கள் தவிடுபொடியாகின. மொத்தம் 7 படையினர் கொல்லப்பட்டதாகவும் 9 படையினர் காயமடைந்ததாகவும் சிறீலங்காப் படையினர் ஒப்புக் கொண்டனர். அதன் பின் அந்த இடத்தைப்பற்றி படையினர் இவ்வாறு கூறினர்: "அது சிவத்தப் பாலம் இல்லே, ரத்தப் பாலம்".



## மேஜர் அபயன்
(கிருஸ்ணமூர்த்தி சிவகுமார்)

தெல்லிப்பளை கிழக்கு,
தெல்லிப்பளை

பிறப்பு:
30.04.1962

வீரச்சாவு:
1.12.1992

1987 ஆம் ஆண்டில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டிருந்த காலத்தில், இவன் யாழ்ப்பாணம் வந்திருந்தான். அதுதான் யாழ்ப்பாணத்திற்கான இறுதிப் பயணம் என்று உணர்ந்திருந்தானோ என்னவோ? உறவினர்கள், நண்பர்கள் என்று ஒருவரது வீட்டினையும் தவறவிடவில்லை இவன். அப்போது, பொதுவாக எல்லாத் தாய்மாருக்கும் இருக்கும் எதிர்பார்ப்பே இருந்தது, இவனது அன்னைக்கும். "டேய்..... எனக்கு கொள்ளி வைக்கிற கடமை இருக்கடா உனக்கு" என்றார். இவன் அமைதியாகச் சிரித்தான். "ஏன்..... வேறை ஆரும் கொள்ளி வைச்சா இந்தக் கட்டை எரியாதோ"? பயணமாகிவிட்டான் மட்டக்களப்புக்கு. ஏனெனில் இந்தியப் படையுடன் போர்தொடங்கிவிட்டது. இனி யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்க முடியாது. மட்டக்களப்பு இவனை எதிர்பார்க்கிறது.

அங்கு இவன் சென்ற நாளிலிருந்து, வீரச்சாவெய்திய நாளிற்கு இடைப்பட்ட இந்தக் காலத்தில், அவனிடமிருந்து வீட்டிற்கு வரும் கடிதங்களெல்லாம் "நான் சுகம். வீட்டிற்கு வரும் போராளிகளை நன்கு கவனிக்கவும்" என்றே இருக்கும்.

இந்தியப் படையினருடனான போர் நிகழ்ந்த காலத்தில் அபயனின் போராட்டப் பங்களிப்பை, மட்டக்களப்புப் போராளிகள் என்றுமே மறக்கமாட்டார்கள். எத்தனையோ முற்றுகைகள் - ஆனாலும் இவன் உறுதியாக இருந்தான்.

தொடர்ச்சியான முற்றுகைகள் போராளிகளைத் தளர்ச்சிகொள்ளச் செய்யும். அப்போதெல்லாம் இவன் அவர்களை உற்சாகப்படுத்துவான் -

"ஓராயிரம் ஆண்டுகள்
ஆகட்டுமே..... நம்
பொறுமையின் பொருள்
மட்டும் விளங்கட்டுமே
வரும் காலமெல்லாம்
நம் பரம்பரைகள்..... நாம்
அடிமையில்லை என்று
முழங்கட்டுமே"

இக் காலகட்டத்தில் அம்பாறை மாவட்டத்தின் மகா ஓயாப் பகுதியில் பயிற்சி முகாம் ஒன்றையும் அமைத்திருந்தான் இவன். அங்கு போராளிகளுக்கு அடிப்படைப் பயிற்சியினை மட்டுமே வழங்க முடிந்தது. துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சிக்குப் போதிய ரவைகள் இருக்கவில்லை. பயிற்சியின் அடுத்த கட்டம், ஒரு முகாமைத் தாக்குவது எப்படியென்பது பற்றிய செயல்முறை விளக்கம் -அது அடுத்தநாள் நடைபெறவிருந்தது. ஆனால், அன்று அதிகாலையில் இந்திய படையினர் அந்த இடத்தை முற்றுகையிட்டனர்.

புதிய போராளிகள் - அனுபவமில்லாதவர்கள் -எனினும், தான் கற்பித்த மாதிரியே அவர்களை நடக்கப் பண்ணினான். அங்கு நின்ற தோழன் ஒருவனிடம், அவர்களைக் கூட்டிக்கொண்டு ஆற்றின் வழியாக இறங்கித் தப்புமாறு கூறிவிட்டு, வேந்தன் என்ற போராளியுடன் இணைந்து இந்தியப் படையினரின் முன்னேற்றத்தைத் தடுத்துக் கொண்டிருந்தான். அபயன் சுட்டுக்கொண்டிருக்கும்போது வேந்தன் பின்வாங்குதல்; பின்பு, வேந்தன் சுட்டுக்கொண்டிருக்க அபயன் பின்வாங்குதல் -சுமார் 15 நிமிட நேரம் இச்சண்டை நீடித்தது. இதற்கிடையில், ஏனையவர்கள் தப்பிவிட்டனர். சண்டையின் இறுதியில், இறந்த தமது சகாக்களினது சடலங்களை மட்டும் தூக்கியவாறு இந்தியப் படை சென்றது.

அதன்பின் இவனது போராட்ட வாழ்வு தம்பிலுவில் -திருக்கோயில் பகுதியில் தொடர்ந்தது. ஒரு மருத்துவனாக -ஒரு தாதியாக -ஒரு போர் வீரனாக -குழுத் தலைவனாக இவனது வாழ்வு தொடர்ந்தது. ஒரு கட்டத்தில் றொபேட் என்ற போராளிக்கு கையில் கண்ணிவெடி வெடித்துவிட்டது. அப்போது மயக்க ஊசியும் இல்லை; தேவையான மருத்துவ கருவிகளும் இருக்கவில்லை. தொடர்ச்சியான முற்றுகைகளில் பலவற்றை இழந்தாயிற்று. எனவே றொபேட்டிடம், "தம்பி! நோகுந்தான்; என்ன செய்யிறது? சமாளி" என்று கூறிவிட்டு, கம்பி வெட்டும் கருவியினாலேயே சிதறிய விரல்களை வெட்டியெடுத்தான். அந்தக் காலத்தில் இவனது மருத்துவம் தான் எத்தனையோ போராளிகளின் உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறது.

இக்காலத்தில், அன்ரனி தலைமையில், வளத்தாப்பிட்டியில் மூன்று 'ஜீப்' புகளில் வந்த இந்தியப் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் உட்பட பல தாக்குதல்களில், இவன் பங்குகொண்டான். இந்தியப் படை அம்பாறையை விட்டு வெளியேறியதும், திருக்கோயிலில் தேசவிரோதிகளின் முகாம் மீதான தாக்குதலில் பங்குபற்றினான். அப்போது அத்தாக்குதலுக்குத் தலைமை தாங்கிய அன்ரனி, "எனக்கு ஏதாவது நடந்தா, அபயன் சொல்லுற மாதிரி நடவுங்கோ" என்று போராளிகளுக்கு அறிவுறுத்தினான். அத்தாக்குதல் மாபெரும் வெற்றியைத் தேடிக் கொடுத்தது. இந்தியப் படையினரின் திட்டங்கள் தோல்வியைத் தழுவின.

மேலும் பல தாக்குதல்கள் - அதிலும் நரிப்புல் தோட்டம் வழியாக வந்த தேசவிரோதிகளை, மிக குறைந்த எண்ணிக்கையான போராளிகளுடன் நின்று வெற்றிகொண்ட தாக்குதல் குறிப்பிடத்தக்கது.

சிறீலங்கா அரசுடனான இரண்டாவது ஈழப்போர் தொடங்கியதும் இவன் களுவாஞ்சிக்குடி காவல் நிலையத்தின் மீது தாக்குதல் தொடுத்தான். இந்தக் காவல் நிலையத்தினைக் கைப்பற்றியதும் ஏனைய போராளிகளிடம் கூறினான்; " 1984 ஆம் ஆண்டு இந்தப் பொலீஸ் ஸ்ரேசனை அடிக்க வந்துதான் பரமதேவாவையும் ரவியையும் இழந்தம். இண்டைக்கு இதைக் கைப்பற்றிக் காட்டியிருக்கிறம்".

தொடர்ந்து பல தாக்குதல்கள் - பல பொறுப்புக்கள். இப்போதெல்லாம் சிறீலங்காப் படையினர் தேடும் முக்கிய புள்ளிகளில் இவனும் ஒருவனாகி விட்டான். மட்டக்களப்பில் தேடப்படும் 12 பேரில் இவனது பெயரையும் சிறீலங்கா அரசு அறிவித்திருந்தது.

அப்போதெல்லாம் அங்குள்ள போராளிகள் இவனது குடும்பத்தைப் பற்றி விசாரிப்பார்கள். "எனக்கு வீடும் இல்லை; சொந்தமும் இல்லை. எல்லாமே நீங்கள் தான்ரா" என்பான். முகாமில், போராளிகளுக்குத் தேவையான எல்லா உணவு வகைகளையும் தேடிக் கொடுப்பான். தான் மட்டும் மரக்கறி வகைகளையே உண்பான். கேட்டால், "எனக்கு அதில விருப்பமில்லை" என்பான். ஆனால், அவன் வீரச்சாவெய்தியதும்தான் அவன் ஒரு பார்ப்பன (பிராமணன்) பையன் என்பது அனைவருக்கும் தெரிய வந்தது. தனக்கு நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்களுக்குக் கூட இவன் இதைப் பற்றிக் கூறவில்லை. அன்று விளாவெட்டுவானில் சிறீலங்காப் படையினர் தாக்கிய போது, இவனை நாம் இழந்தோம். ஆயினும், அங்குள்ள போராளிகளுக்கு இவன் பாடும் பாடல்கள் நினைவில் உள்ளன.

"வரும் காலமெல்லாம் நம்
பரம்பரைகள்
நாம் அடிமையில்லை என்று
முழங்கட்டுமே!"

-கிறேக்-

## நாடு நிச்சயம்...

"மச்சான் நீ வெளிநாட்டில இருந்து திரும்பிவரேக்க நான் இருக்கின்றேனோ இல்லையோ இந்த நாடு நிச்சயம் இருக்கும்" சிறிகாந்தன் கூறிய அந்த வார்த்தைகளை நினைத்துக்கொள்கின்றான். எண்பத்தி மூன்றில் கொழும்பில் நடந்த இனக்கலவரத்தில் எரிக்கப்பட்ட தனது தாய் மாமாவின் மரணச் செய்தியை அறிந்தவுடன் இருந்தது போன்ற மனநிலை..... அனைத்திலுமிருந்து தன்னைச் சுதாகரித்துக் கொண்டவனாக எழுந்து, தன் வழக்கமான கடமைக்காகச் செல்கின்றான். அவனுக்காக அங்கு சிலர் காவல் நின்றனர். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாடு நிச்சயம்

**சிறு கதை**

**ரகுராம்**

1

அன்று புதன்கிழமை. வழக்கத்திற்கு மாறாகத் தாண்டிக்குளம் தடை முகாம் காட்சியளித்தது. நான்கு நாட்களாக படையினரால் மறிக்கப்பட்டிருந்த பிரயாணிகள் மீண்டும் வடபகுதிக்குள்ளேயும், வெளியேயும் செல்வதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டதால், தத்தமது உடைமைகளையும் சுமந்துகொண்டு, சுறுசுறுப்புடன் காணப்பட்டனர். இவற்றின் மத்தியில் படையினரின் மிரட்டல்கள், சீறல்கள், அடாவடித்தனங்கள். இவை இரண்டிற்கும் இடையில் கழுகுப்பார்வைகளுடன் நடமாடிக்கொண்டிருக்கும் எம்மினத்துரோகிகள். ஆண், பெண், சிறியவர், பெரியவர் என்ற பேதங்களற்ற நிலையில் தமது வாயில் வருபவற்றை எல்லாம் கேலியும், கிண்டலுமாக கொட்டிக் கொள்கின்றனர். இவர்களுள் ஒருவனாகவும் பார்வைக்கு அமைதிமிக்க ஒருவனாகவும் திகழ்கின்றவன்தான் கமலன். காலையில் இருந்து வழக்கமான வேலைகளுடன் இருந்த கமலன், தனது கைக்குக் கிடைத்த ஈழநாதம் செய்தித்தாளைப் படித்ததும் செயலற்றவனாகி விடுகின்றான். கடந்த சனிக்கிழமை வெளியாகிய அந்தச் செய்தித்தாளின் முதற் பக்கத்தில் வெளியிடப்பட்டிருந்த, வீரவணக்கம் என்ற வாசகத்தின் கீழ் இருந்த வரி உடையிலான புகைப்படமும் அதோடு சேர்ந்த விபரங்களுமே அவனை இவ்வாறு ஆக்கியது. அந்தப் புகைப்படத்தினை நன்றாக உற்றுப்பார்க்கின்றான்.....

2

"செம்பாட்டுத்தரை" என்று எல்லோராலும் கூறப்படுகின்ற சிவந்த மண்ணையும், அந்த மண்ணுக்குப் பயன்தரும் வகையில் செழித்து ஓங்கி வளர்ந்திருக்கும் வாழை மரங்கள்; பூக்களோடும், காய்களோடும் நிமிர்ந்து நிற்கும் மிளகாய்ச் செடிகள்; மண்ணுக்குள் புதைந்த வண்ணம் பசுமையை வெளிக்காட்டும் வெங்காயம்; இவற்றோடு போட்டிபோடும் புகையிலை, குரக்கன் பயிர்கள். அத்தனை பசுமைகளும் நிறைந்த கிராமம்தான் வடக்கு நீர்வேலி. குடும்பங்களுக்கிடையில் ஏதாவது சிறிய சச்சரவுகள் ஏற்பட்டாலும். அது அண்ணன் தம்பி குடும்பங்களிற்குள் நடப்பதுபோலவே இருக்கும். இப்படியான இரு குடும்பங்களில் ஒரே ஆண்டில் பிறந்தவர்களே கமலேஸ்வரனும் சிறிகாந்தனும்.

ஒன்றாகவே கல்வி கற்று, விளையாடி, தெருக்களில் சுற்றித்திரிந்து, கிராமத்தில் இவர்களுக்கு ஏற்படும் சகல பிரச்சினைகளுக்கும் ஒன்றாகவே முகம் கொடுத்து, எதையும் இருவருமே ஏகமனதாக முடிவெடுக்கும் உள்ளத்தோடு வாழ்ந்தவர்கள். க. பொ. த. சாதாரணதர தேர்வு முடிவுகள் வெளியாகின. சிறிகாந்தன் உயர்வகுப்பில் கணிதப் பிரிவில் கற்பதற்கான தகுதி பெற்றிருந்தான். கமலேஸ்வரனோ கலைப் பிரிவில் தான் கற்கத் தகுதி பெற்றிருந்தான். இது இவர்கள் இருவருக்கும் மிகவும் ஏமாற்றத்தையும், மன அமைதியின்மையையும் ஏற்படுத்தியது. இதுவரை காலமும் ஒரே வகுப்பில்..... இனிவரும் காலங்களில் வெவ்வேறு வகுப்புக்களிலா.....?

சிறிகாந்தன் ஒரு முடிவுக்கு வருகிறான்.

"மச்சான் நீ மெட்ஸ் படிக்கேலாது. ஆனா நான் ஆட்ஸ் படிக்கலாம் தானே. ரெண்டு பேரும் ஆட்ஸே படிப்பமடா". "நீயாவது இன்ஜினியரா வாவனடா"

நீண்ட விவாதத்தின் பின்னர், இருவரும் ஒரே முடிவை எடுக்கின்றனர். மீண்டும் அதே பாடசாலையில் ஒரே வகுப்பில் -ஆனால் உயர்வகுப்பில் - அவர்களின் கல்வி தொடர்கின்றது அமைதிப் படையாக வந்த இந்தியப் படை, அரக்கப் படையாக மாறிக்கொண்டு இருந்த காலம். பாடசாலைகள் சீராக இயங்காத நிலை. வாகனப் போக்குவரத்துகள் ஒழுங்கற்ற தன்மை. வீடுகளில் இளைஞர்களோ, இளம் பெண்களோ நிம்மதியாக உறங்க முடியாத அவலம். தெருக்களில் மாணவர்களோ, வியாபாரிகளோ நடமாட முடியாத பயங்கரம். இந்நிலைக்கு சிறிகாந்தனும், கமலேஸ்வரனும் விதிவிலக்காகவில்லை.

"மச்சான் இண்டைக்கு இரவைக்கு ஏழரைபோல அந்த அண்ணை வாறனெண்டவர். நீ என்ன மாதிரி?" என்று கூறியவாறு கமலேஸ்வரனின் முகத்தை நன்றாக உற்றுப் பார்க்கிறான்.

"மச்சான் உனக்குத் தெரியும்தானே அம்மாவின் நிலை. எண்பத்தி மூண்டிலை கடையோட சேத்து மாமாவைக் கொளுத்தினதோட, மனுசிக்குப் பிடிச்ச ஏக்கம் இன்னும் தீரவில்லை. அதில இருந்து ஒரே வருத்தம். இந்த நிலையில நானும்..... நீ போ மச்சான். நான் பிறகு பார்த்து வாறன்". இருவருக்கும் இடையில் வழக்கமான விவாதம்; வழக்கமான ஏகமனம்; ஆனால், மாறுபட்டது. குறிப்பிட்ட இடத்திற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு இருவரும் செல்கின்றனர். குறிப்பிட்ட அண்ணை வந்தார்.

"தம்பி சுணங்கேலாது. அவன்கள் இந்தப் பக்கம் வரமுதல் நாங்கள் போயிட வேணும்."

"சரி மச்சான் நான்போட்டு வாறன். நீ கவனம்".

"ஓம்..... மச்சான்" இருவரும் விடைபெற்றனர். ஒருபக்கம் சிங்களவனின் அபகரிப்பு. மறுபக்கம் இந்தியனின் ஆக்கிரமிப்பு. இவற்றிலிருந்து மண்ணை மீட்டெடுக்கும் தாகத்தோடு, சிறிகாந்தன் மிக உற்சாகமாக நடந்து சென்றான். மிகவும் சோர்வுற்ற நிலையில் கமலேஸ்வரன் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில், இந்தியப் படையினரால் கைது செய்யப்படுகின்றான்.

அநியாயக்காரர்களின் அட்டூழியங்கள் முடிவுற்ற காலம் அது. நீண்ட இடைவெளிக்குப் பின்னர், மக்கள் மத்தியில் ஒரே விதமான குதூகலம். திரும்பும் பக்கங்களிலெல்லாம் வண்ணத்துப் பூச்சிகளாக விடுதலைப் புலிகள். அவர்களிலொருவனாக கஜன் என்ற பெயரில் சிறிகாந்தன். நேராக கமலேஸ்வரனின் வீட்டுக்குச் செல்கின்றான். இயற்கையில் சோர்வாகக் காணப்பட்ட சிறிகாந்தன், திடமான இளைஞனாக வாசலில் நிற்கின்றான். இதற்கு மாறாக, சோர்ந்த வண்ணம் படுக்கையை விட்டு எழுந்து வந்தான் கமலேஸ்வரன். ஒருவரை ஒருவர் அணைத்துக் கொள்கின்றனர்.

"நீ பிடிபட்டு கே. கே. எஸ்ஸில இருக்கிறாய் எண்டத நான் காட்டுக்கையே அறிஞ்சனான் மச்சான்"

"நீ இடைக்கிடை இஞ்சாலபக்கம் வந்து போனனியோடா....."

"ஓம் மச்சான், உன்ர வீட்டையோ என்ர வீட்டையோ போகேலாத நிலை..... தெரியும்தானே; மற்றவங்களும் நிண்டவங்கள்".

இருவரும் நீண்ட நேரமாக உரையாடிவிட்டு, ஒன்றாகச் சாப்பிட்டு விட்டு விடைபெற்றனர்.

மீண்டும் சிறீலங்கா அரசினால் திட்டமிடப்பட்டு, படையினரால் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர் தமிழீழ மக்கள். திரும்பும் இடமெல்லாம் இடிந்துவீழ்ந்து கொண்டிருக்கும் வீடுகளும் கட்டடங்களும் அவற்றின் இடிபாடுகளுக்கிடையில் மனித உடலின் கூறுகள். பிணம்தின்னும் பறவைகள் வட்டமிடும் சுடுகாடாகக் காட்சியளித்தது யாழ். குடாநாடு. கோட்டைச் சமரில் காயப்பட்ட சிறிகாந்தன், மந்திகை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தான். அவனைப் பார்வையிட வந்திருந்த கமலேஸ்வரன் அருகில் நின்றான்.

"எனக்கொண்டும் பெரிய காயமில்லை. நீ ஏன் யோசிக்கிறாய் மச்சான்?"

"அதுக்கில்லையடா, நாளைக்கு நான் கொழும்புக்குப் போறன்."

"அங்கபோய் என்ன செய்யப்போறாய்.....?"

"வெளிநாடுபோப் போறன்....."

அரைமணி நேர உரையாடலின் பின்னர் கமலேஸ்வரன் விடைபெறுகிறான்.

"மச்சான் சந்தோசமாப் போட்டுவா. மச்சான் நீ வெளிநாட்டில இருந்து திரும்பி இங்க வரைக்க, நான் இருக்கிறனோ இல்லையோ இந்த நாடு நிச்சயம் இருக்கும். போட்டுவா....."

வெளிநாடு செல்வதற்காக கொழும்பு நகர் சென்ற கமலேஸ்வரன், தனக்குப் பயண ஏற்பாடுகளைச் செய்யும் வெளிநாட்டு முகவர் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்ட விடுதியில் தங்கிக் கொள்கின்றான். அதே விடுதியில், பக்கத்து அறையில் சில தமிழ் இளைஞர்கள். அந்த அறைக்குள் இரவும் பகலும் ஒரே மாதிரி. ஆரம்பத்தில் அவர்களைப் பற்றிப் புரிந்து கொள்ளாத கமலேஸ்வரன், காலப் போக்கில் அறிந்துகொள்கின்றான். தமிழினத்தினை அழிப்பதற்காகச் சிங்கள எதிரியானவன் பயன்படுத்தும் கைக்கூலிகள் அவர்கள் என்பதைச் சந்தேகமின்றி தெளிவுபடுத்திக் கொள்கின்றான். எனினும் அவர்களின் நண்பனாகக் கமலேஸ்வரனும், கமலேஸ்வரனின் நண்பர்களாக அவர்களும் மாறுகின்றனர். இவ்வாறான உறவு மலர்ந்ததற்கான ஆரம்பக் காரணம், அவர்களின் உல்லாச வாழ்க்கை அவனைக் கவர்ந்ததும், அவனிடம் சிறிதளவு தொகைப் பணம் உண்டு என்பதை அவர்கள் தெரிந்து கொண்டதுமே. இடையிடையே அவர்களுக்குப் பணக் கஸ்டம் வருவதுண்டு. அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் தன் நண்பர்களிடம் கமலேஸ்வரன்,

"என்ர ஏஜென்சிக்காரன் சுத்துறான். இண்டைக்கு ஆளைத்தூக்கி காசு பறிப்போம்"....."

"இப்பவே முடிப்போம் அலுவலை"

ஒருமித்த பல குரல்கள் உற்சாகமாய்.

கமலேஸ்வரனின் ஏஜென்சியிடமிருந்து ஏற்கனவே கொடுத்த பணத்தோடு, மேலதிகமாகவும் பறிக்கப்பட்ட பணம் சில நாட்களிலேயே செலவாகிவிட்ட நிலையில், எல்லோரும் ஒன்றாக வட்டமாக அமர்ந்துகொண்டு ஒரு ஆழ்ந்த திட்டத்தினைப் போடுகின்றனர். அவர்களில் ஒருவனும் அந்தக் குழுவிற்கு தலைவனுமானவன், கமலேஸ்வரனைப் பார்த்து.....

**"மச்சான் சந்தோசமாப் போட்டுவா. மச்சான் நீ வெளிநாட்டில இருந்து திரும்பி இங்க வரைக்க, நான் இருக்கிறனோ இல்லையோ இந்த நாடு நிச்சயம் இருக்கும். போட்டுவா.....".**

"லொட்சுகளில் இருக்கிற எங்கட சனங்களில எல். ரி. ரி. ஆதரவாளர்களை உன்னால அடையாளம் காட்ட முடியுமோ?"

"ஏன் அவங்கள ஆமியிட்ட காட்டி கொடுத்துட்டு காசு வாங்குறத்துக்கோ?"

"அவன் தாற காசு எந்த மூலைக்கடா காணும்.....? நாங்களே ஆக்கள தூக்கிட்டு அவையின்ர வெயிற்றைப் பார்த்து காசு பறிப்போம்".

"மணி ஐடியா மச்சான். நானும் ஒருக்கா யோசிச்சனான். எனக்கு கனக்க பேரைத் தெரியும். இண்டைக்கே தொழிலைத் தொடங்குவோம்....."

அவர்களின் அம்முயற்சி வெற்றியளிக்கின்றது. கொழும்பு நகரில் உள்ள தமிழர்கள் அதிகமாகத் தங்கும் ஏதாவது ஒரு விடுதிக்குச் செல்வார்கள். அங்கு உறைவிடம் தேடிநின்ற தமிழீழத் தமிழர்களில் கமலேஸ்வரனினால் இனங் காட்டப்படுபவர்கள் அழைத்துச் செல்லப்படுவர்..... அடி, உதை, மிரட்டல்..... விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர் அல்லது ஆதரவாளர்கள் என்ற முத்திரை பதித்தல்.....

**தொடர்ச்சி 4ம் பக்கம் ....**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ மக்களுக்கு ஒரு புதிய நீதி நிர்வாக அமைப்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழ மக்களுக்கென ஒரு புதிய நீதி நிர்வாக அமைப்பை உருவாக்கியுள்ளனர். இது ஒரு அத்தியாவசியத் தேவையாக இருந்தது. போர்த்துக்கீசர் ஆட்சிக்கு தமிழீழ மக்கள் வலுக்கட்டாயமாக உட்படுத்தப்பட முன்னர், தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் சமாதானமாகவும் வாழ்ந்து வந்தனர். அதேபோல் தமிழ் மக்கள் தமது சொந்தத் தாயகத்தில் தம்மையே தாம் ஆண்டுகொண்டு சமாதானமாகவும், சுதந்திரமாகவும் வாழும் உரிமையை சிறீலங்கா அரசு ஏற்கமறுத்தபோது, தமிழ் மக்கள் சமாதானமான, அகிம்சை முறையிலான போராட்டங்களை மேற்கொண்டனர். இலங்கையில் இருந்து ஆங்கிலேயர் வெளியேறிய பின்னர், மாறி மாறி ஆட்சிப் பீடத்திற்கு வந்த, பௌத்த -சிங்கள இனவாத அரசுகள் தமிழ் மக்களின் சமாதானமான அகிம்சை முறையிலான போராட்டங்களுக்கு மதிப்புக்கொடுக்காது வன்முறையில் ஈடுபட்டு, தமிழ் மக்களை அழித்து ஒழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் காரணத்தால், படைக்கலம் ஏந்திப் போராட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டார்கள். தமிழீழத்தில் உள்ள சிங்களக் காவல்துறை, இராணுவம், அரச இயந்திரம் என்பன முற்றாகச் செயலிழக்கச் செய்யப்பட்டன. இதன் காரணமாக சிறீலங்கா அரசு தமிழ் மக்களை அழிப்பதற்கென்றே, தமிழீழத்திற்கு எதிரான ஒரு போரைப் பிரகடனப்படுத்தியது. சிங்கள அரசின் சிவில் நிர்வாகம் நிலை குலைந்தது. தமிழ் மக்களின் சார்பில் இப்போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற தமிழீழ விடுதலைப் புலிகள், மக்களின் அன்றாடத் தேவைகளுக்கான மாற்று ஒழுங்குகளையும் புதிய வழிமுறைகளையும் செயற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானார்கள்.

### சட்டக் கல்லூரி

ஆரம்பத்தில் விடுதலைப்புலிகள் தமது அமைப்புக்களின் ஊடாக நீதி வழங்கினார்கள். ஆனால், அது முற்று முழுதான தேவையைப் பூர்த்தி செய்யவில்லை. அதன் பின்னர், அவர்கள் தமக்கென ஒரு காவல்துறையை உருவாக்கினர். அவர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் நிர்வகித்து வருகின்றனர். தமது இராணுவ வெற்றிகளின் மூலம் தமிழ் மக்களுக்கு விடுதலைப்புலிகள் ஒரு இயல்பு நிலையைப் பெற்றுக் கொடுத்தனர். இவ்வேளையில், பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கும், குற்றச் செயல்களைத் தடுப்பதற்கும், சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்கும், சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நீதி நிர்வாக அமைப்புத் தேவைப்பட்டது. இதனைக் கருத்திற்கொண்டு தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் ஒரு தனியான நீதித்துறையையும், சட்டக் கல்லூரி ஒன்றையும் நிறுவினார். தமிழீழ சட்டக்கல்லூரி, ஆண்களையும் பெண்களையும் உள்ளடக்கிய சுமார் 40 மாணவர்களுடன் இயங்கத் தொடங்கியது. சட்டத்திலும், வேறு துறைகளிலும் துறை சார்ந்த அறிஞர்களால், மாணவர்கள் போராட்டச் சூழ்நிலைகளின் மத்தியிலும் பயிற்றுவிக்கப்பட்டனர். இப்போது இம்மாணவர்கள் தேர்வில் சித்தியடைந்து, சத்தியப் பிரமாணமும் எடுத்துவிட்டனர்.

### மேன்முறையீடு

தமிழீழ நீதித்துறை தமிழீழத்தின் வெவ்வேறு பகுதிகளில் குடியியல், குற்றவியல் பிணக்குகளை விசாரணை செய்து, நீதி வழங்குவதற்காக தமிழீழ நீதி மன்றுகளை திறந்துள்ளது. பாதிக்கப்பட்டோருக்கு விரைவாகவும், தீர்க்கமானதுமான நீதியைக் குறைந்த செலவில் வழங்குவதே இந் நீதிமன்றுகளின் நோக்கமாகும். இந் நீதிமன்றுகள் வெளித் தலையீடுகளுக்கு அப்பால் சுதந்திரமாக இயங்கி அதன் தனித்துவத்தையும், புரட்சிகரத் தன்மையையும் உலகத்திற்கு எடுத்துக் காட்டக் விளங்கும் விதத்தில் இயங்கும். இவற்றைவிட மூன்று நீதிபதிகளைக் கொண்ட ஒரு மேல்விசாரணை அமைப்பும், நீதி நிர்வாகக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. மேல்விசாரணை மன்றின் தீர்ப்பே தமிழீழத்தில் இறுதியானதுமாக விளங்கும். தேசியத் தலைவரினால் காலத்திற்குக் காலம் பிரகடனப்படுத்தப்படும் சட்டங்களையும் ஏற்று, சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட முறையிலான நீதியும் ஒப்பரவுமான முறையில் நீதி பரிபாலனம் செய்யப்படும். இந்நீதிமன்ற அமைப்புக்களில் ஒரு விசேட அம்சம் யாதெனில், ஒரு வைத்தியகலாநிதி, சட்ட அறிஞர், **பொறியியலாளர்**, நில அளவையாளர், சமூகத்தில் பெரும் மதிப்பு மிக்க அறிஞர்கள் போன்றவர்கள் கொண்ட நிபுணர் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் ஆலோசனைகளைக் கட்சிக்காரர் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். நீதியாளர்களும் ஆலோசனைகளை இவர்களிடம் இருந்து பெறலாம்.

**ச.தியாகராசா**

தமிழீழத்தில் தற்போது வாழும் சகல சட்டத்தரணிகளும், தமிழீழச் சட்டக்கல்லூரியில் பயின்று, சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட சட்ட அறிஞர்களுடன் சேர்ந்து, தமிழீழ நீதிமன்றுகளில் கட்சிக்காரர்களின் சார்பில் தோன்றலாம். இந்த விடயத்தில் ஒரு விசேட அம்சம் என்னவெனில், சட்டத்தரணிகளின் கொடுப்பனவுகள் ஒரு படிமுறை அடிப்படையில் கட்சிக்காரரால் நீதிமன்றத்தில் கட்டப்படும். அதன்பிறகுதான் அப்பணம் சட்டத்தரணிகளுக்கு வழங்கப்படும். வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் ஏழைகளாக இருந்தால், இலவசமான சட்ட உதவித்திட்டம் ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தனிநபர்கள் பிறருக்கு எதிராக வழக்குகளைத் தாக்கல் செய்யவும், தமக்கெதிராக வைக்கப்பட்ட வழக்குகளில் தாமே தம் சார்பில் தோன்றி வாதிட்டு வழக்காடவும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

### சட்டக் கோப்புக்கள்

நாட்டின் சட்டங்கள் சீரமைக்கப்பட்டு நூல் வடிவில் வெளியிடப்படும் தறுவாயில் உள்ளன. திருத்திய தேச வழமைக் கோவை, இன்றைய சமூகத்திற்கு ஏற்ப திருத்தப்பட்ட தண்டனைக்கோவை, கோயில் காணிக்கை பற்றிய நம்பிக்கைச் சட்டம் போன்றவை எல்லாம் வெளியிடப்படும் தறுவாயில் உள்ளன. பிரபல சட்ட அறிஞர்களாலும், சட்டத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களாலும் இக்கோவைகள் தயாரிக்கப்பட்டு தேசியத் தலைவரின் அனுமதியின் பின் வெளிவர இருக்கின்றன.

குற்றவியல் வழக்குகளில் தமிழீழ காவல்துறையினர் வழக்குகளை **நெறிப்படுத்துவர்**. தேவையேற்படும் பட்சங்களில் அவர்களுக்கு சட்ட அறிஞர்களின் உதவியும் கிடைக்கும். தமிழீழக் காவல் துறையும், புதிய நீதிமன்ற அமைப்பும் ஒருங்கிணைந்து செயற்படும். குற்றவியல் குற்றச்சாட்டு தொடர்பாக தமிழீழ காவல்துறையால் கைது செய்யப்படும் சந்தேக நபர்கள் காவல் துறையின் ஆரம்ப விசாரணைகளின் பின்னர், அப்பிணக்கை சமரசமாகத் தீர்த்துவைக்க முடியாதுவிடத்து, அண்மையில் உள்ள நீதிமன்றின் முன் நிறுத்தப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் சந்தேக நபரைத் தொடர்ந்து 48 மணித்தியாலத்திற்கு மேலாகக் காவல்நிலையத்தில் தடுத்துவைக்க முடியாது.

### தொழில் பிணக்குகள்

தமிழீழ நீதித்துறை குடும்ப நீதிமன்றங்களையும் விரைவில் ஆரம்பிக்க உள்ளது. தனித்துவமான தொழில் நீதிமன்றங்கள் அமைக்கும்வரை, தொழிலாளர்களின் பிணக்குகள் சம்பந்தமான விடயங்களும் தமிழீழ நீதிமன்றங்களில் நடைபெறும். சட்டப்படியான கொடுப்பனவுகள்பற்றி விசாரிக்கவும் நீதிவழங்கவும் தொழில் நீதிமன்றங்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. வேலையில் இருந்து நீக்கப்பட்ட ஒருவர், தான் வேலையில் இருந்து நீக்கப்பட்டு ஆறு (6) மாத காலத்திற்கு இடையில் தொழில் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். நாட்டு நிலைமைகளினால் முறையான மன்றுகள் இல்லாத காரணத்தினால் விண்ணப்பிக்க முடியாது இருந்தவர்கள், சம்பந்தப்பட்ட நீதிமன்று இயங்கத்தொடங்கி ஒருமாத காலத்திற்குள் தமது விண்ணப்பங்களைப் பதிவு செய்துகொள்ளலாம் என்ற சலுகையும் வழங்கப்பட்டுள்ளது.

### கைநூல்

புதிய நீதிமன்ற அமைப்புக்கள் ஆரம்பிக்க இருப்பதோடு தொடர்பாக "தமிழீழ சட்டக்கோவை" எனும் ஒரு கைநூல் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது. அது மக்களுக்கு விற்பனைக்கு விடப்படும். குற்றங்களும் அவற்றிற்கான தண்டனைகளும் இதில் விபரிக்கப்பட்டுள்ளன. வீதி ஒழுங்குகள் மீறல்களுக்கும் அவற்றிற்கு ஏற்ப தண்டனைகளும் ஒரு தனி அத்தியாயமாகக் காட்டப்பட்டுள்ளது. வீட்டு வாடகை, அதிலிருந்து வெளியேற்றம், காணிப் பிரிவிடுதல்கள், கடன்களை மீளப் பெறுவதற்கான ஒழுங்குவிதிகளும் இப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. உண்மையில் இப்புத்தகம் சட்டத்தரணிகளுக்கும், நீதியாளர்களுக்கும் மிகவும் உதவுமுகமாக வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது. ■

**நன்றி: ஈழநாதம்**




## நிகழ்வும்.....

"நாங்கள் உங்களுக்கு உதவி செய்வதற்காகவே வந்தோம். நீங்கள் எங்களுடன் ஒத்துழைக்க மறுக்கிறீர்கள்" எனக் குறிப்பிட்டபோது ஒரு பெண், "உண்மையில் நீங்கள் எங்களுக்கு உதவி செய்யவே வந்திருந்தால், திலீபனின் கோரிக்கைகளுக்கு சாதகமான பதிலை உங்கள் அரசிடமிருந்து பெற்றுத் தாருங்கள். அது வரை உங்களை எங்கள் வீதிகளில் நடமாட, நாங்கள் அனுமதிக்க மாட்டோம்" என உறுதியாகக் கூறினார். மக்களின் உறுதிக்கு முன்னால் வேறு வழியின்றி இந்தியப் படையினர் தமது முகாமுக்குள் திரும்பிச் சென்றனர். இப்படி எத்தனையோ சம்பவங்கள் அக்காலப் பகுதிகளில் பதிவு செய்யப்பட்டன.

திலீபனின் உண்ணாவிரதப் போராட்டத்தினை இந்தியா உரிய முறையில் அணுகத் தவறியது. இலங்கை -இந்திய ஒப்பந்தத்தையே தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உரிய தீர்வாகக் கொண்டிருந்த இந்தியா, அவ் ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயத்தினையே அமுல்படுத்தக் கோரியது. திலீபன் முன்வைத்த கோரிக்கைகளை அலட்சியம் செய்தது. உண்மையில் இலங்கை -இந்திய ஒப்பந்தத்தினை, தமிழர்கள் தமது போராட்டத்தினை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதற்கு பயன்படுத்தி விடக்கூடாது என்பதிலேயே இந்தியத் தரப்பு குறியாக இருந்தது. அதேவேளை இவ் ஒப்பந்தத்தினைப் பயன்படுத்தி இந்தியாவினை, விடுதலைப் புலிகளுடன் மோதலில் ஈடுபடுத்தும் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் திட்டத்திற்குத் துணை போவதாகவே இந்தியத் தரப்பின் செயற்பாடுகள் அமைந்தன.

26-09-1987 அன்று, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினையும் அதனை அமுல்படுத்த வந்த இந்தியாவினையும் அம்பலப்படுத்தி, திலீபன் எம்மை விட்டுப் பிரிந்தான். அவன் மறைந்த செய்தி கேட்டுத் தமிழீழமே அழுதது. இந்தியா எனும் மாயமானை நம்பியிருந்தவர்கள் எல்லாம் உண்மையை உணர்ந்தனர். இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஒரு நாள், இவ் ஒப்பந்தம் எமது போராட்டத்திற்கு ஏற்படுத்தக்கூடிய ஆபத்துக்களை நானும், நண்பர்கள் ஜெயராஜ் (தற்போதைய ஈழநாதம் ஆசிரியர்), ரஞ்சித் ஆகியோரும் விவாதித்துக் கொண்டிருந்தோம். "எமது போராட்டம் அடுத்த கட்டத்திற்கு நகர்த்தப்பட வேண்டுமானால் இந்தியாவின் போக்கு, மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தப்படல் வேண்டும். இவ்வாறு இந்தியாவை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவதற்கு குறைந்தது இரண்டு வருடங்கள் பிடிக்கும்" என்பதே அப்போது எமது கணிப்பாக இருந்தது. ஆனால், திலீபனின் போராட்டம் பன்னிரண்டு நாட்களில் எமது மக்களுக்கு உண்மையை உணர்த்தியது.

"திலீபன்" எனும் "அக்கினிக் குஞ்சு" மூட்டிய சுவாலை, இன்றும் தமிழீழ மக்கள் மத்தியில் எரிந்து கொண்டுதான் இருக்கிறது. தமிழீழ மக்கள் பூரண சுதந்திர மனிதர்களாக இவ்வுலகில் வலம்வரும் வரை இச்சுவாலை எரியவே செய்யும். இவ்வுலகில் மனிதர்கூட்டம் இருக்கும் வரை, திலீபனின் சரிதம் நிலைக்கவே செய்யும். ■

## சோமாலியாவில்.....

(நிதி) ஐ. நாவிற்குத் தேவைப்படுகின்றது. ஆனால், என்றுமில்லாதவாறு பெரும் செல்வ நெருக்கடியை, தான் எதிர்நோக்கி இருப்பதாக ஐ. நாவின் பொதுச் செயலாளர் கூறுகிறார். அமைதிப்பணிக்காக சென்றோருக்கு தொடர்ந்து வேதனம் வழங்கவே பணமில்லை என்றும், ஏற்கனவே பலருக்கு சீராகப் பணம் வழங்கப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது. இதற்குக் காரணம் உலக அமைதிக்கு ஐ. நா. படை பாடுபட வேண்டும் என்று கூறும் அமெரிக்கா, பெருமளவு பணத்தை ஐ. நாவிற்குச் செலுத்தாமல் இருப்பதேயாகும். அவ்வாறே ருஸ்சியாவும் செலுத்த வேண்டும். இவ்வாறு இன்னும் பல நாடுகள் தமது நிலுவையைச் செலுத்தவில்லை. இவற்றைவிட ஐ. நாவில் அமைதிப்பணிபுரியும் படைகளிடையே பல இடங்களில் முறுகல் நிலை - யாருடைய கட்டுப்பாட்டில் பணிபுரிவது என்பது தொடர்பாக ஏற்படுகின்றது. சோமாலியாவில் இத்தாலியப்படை வீரர்கள் அமெரிக்க படைத்தளபதிகளின் ஆணையை ஏற்கத் தயங்குகின்றனர்.

எனவே இவ்வாறு பல சிக்கல்களுக்கும் ஐ. நா. இன்று முகம் கொடுப்பதால், சோமாலியாவில் அடுத்து ஐ. நா. என்ன செய்யப் போகின்றது என்பதைப் பலரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். ஏனென்றால், அய்டீட்டின் ஆதரவாளர் ஒருவர் குறிப்பிட்டது போல "இங்கு படைக்கலங்கள் குவிந்து போயுள்ளன. படைக்கலங்கள் களையப்படாமல், அமைதி வராது என்பது உண்மைதான். ஆனால், உலங்கு வானூர்திக் குண்டு வீச்சால் இதைச் சாதிக்க முடியாது. பேச்சுவார்த்தை, இணக்கமான கலந்துரையாடல் மூலமே இதைச் செய்யமுடியும்". அதேசமயம் அமெரிக்காவோ தக்க பதிலடி கொடுத்து, அய்டீட் போன்றோரை மடக்கிப் பிடித்து, தக்க பாடம் படிப்பிப்பதன் மூலமே, சோமாலியாவில் அமைதியை நிலைநாட்டலாம் என்கின்றது. எனவே இதில் எவ்வழியில் சென்று, அமைதியை ஐ. நா. நிலை நாட்டப் போகின்றது என்பது நாம் காத்திருந்து காணவேண்டிய முடிவாகும். அதுவரை பட்டினியால் வாடும் சோமாலிய மக்கள் உயிர் தப்பிவாழ்வார்கள் என்பதே எமது நம்பிக்கையாகும். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## செல்வி சுஜீதாவின் மர்மமான மரணத்தை ஒட்டி

# தமிழ் மாணவர் அமைப்பு நடாத்திய மௌன ஊர்வலம்

☆ ஜேர்மன் பொலிசார் எதிர்பாராத மக்கள் கூட்டம்

☆ மூவாயிரத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்







சென்ற சனிக்கிழமை 18-9-93 ஜேர்மன் நாட்டில் லீனிச் நகரத்தில், தமிழ் மாணவர் அமைப்பினர் செல்வி சுஜிதா மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டதை முன்னிட்டு ஒரு மௌன ஊர்வலத்தை ஒழுங்கு செய்திருந்தனர்.

லீனிச் நகரத்திலுள்ள செல்வி. சுஜிதாவின் வீட்டில் ஆரம்பமான அந்த ஊர்வலம், தேவாலயத்தை வந்து பின் சேமக்காலையைச் சென்றடைந்தது. ஊர்வலம் அமைதியாகவும் ஒழுங்காகவும் நடைபெறுவதற்கான ஏற்பாட்டை சீருடை அணிந்த தமிழ் மாணவர் அமைப்பின் அங்கத்தினர் செய்திருந்தனர்.

'தமிழரின் கண்ணியத்தைப் பறைசாற்றும் வகையில் ஒழுங்கு கடைப்பிடிக்கப்பட வேண்டும், கோசங்கள் தவிர்க்கப்பட்டு மௌனம் முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும்' என மாணவர் அமைப்பின் தலைவர் வேண்டுகோள் விடுத்து ஊர்வலத்தை ஆரம்பித்து வைத்தார். செல்வி. சுஜிதாவின் மிகப் பெரிய அளவிலான உருவப்படத்திற்கு தாய், தந்தையர் மாலையிட அந்த உருவப்படத்தை மாணவர் அமைப்பின் உறுப்பினர்கள் தாங்கிச் சென்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஜேர்மன் கிளை, டென்மார்க் கிளை, கலை பண்பாட்டுக் கழகம், உலகத் தமிழர் இயக்கம், தமிழ் மாணவர் அமைப்பு ஆகியன உட்பட ஐம்பதுக்கும் மேற்பட்ட அமைப்புக்கள் மலர் வளையங்களை தாங்கி ஊர்வலத்தில் கலந்துகொண்டன. தமிழாலய மாணவ மாணவிகள் சீருடையோடு ஊர்வலத்தில் பங்கேற்றனர். பல கழகங்கள் சுலோக அட்டைகளைத் தாங்கி வந்தன. "மனித நேயம் வளர்க்கப்படவேண்டும்", "பொலிசாரின் அலட்சிய மனப்பான்மை நீக்கப்பட வேண்டும்" ஆகிய சுலோகங்கள் அடங்கிய சுலோக அட்டைகள் ஊர்வலத்தில் தாங்கிச் செல்லப்பட்டன.

சுஜிதா படித்த பாடசாலையூடாக தேவாலயம் சென்றடைந்த மக்கள் அங்கு நடந்த பிரார்த்தனையில் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....





திலீபனின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலியின் போது

திலீபனின் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலியின் போது



## செல்வி சுஜீதாவின் மரணம்

# தமிழ் மக்களுக்கோர் எச்சரிக்கை

ஜேர்மனியில் வாழ்ந்துவரும் வெளிநாட்டவர்களுக்கு பாதுகாப்பு உள்ளதா? அவர்களது வாழ்க்கை நிரந்தரமானதா? எதிர்காலம் எப்படி அமையும்? என்ற கேள்விகள் அவர்களது மனங்களில் எழுந்தவண்ணமே உள்ளன.



கேணல் கிட்டு அவர்களின் அஞ்சலி நிகழ்ச்சியின்போது செல்வி. சுஜீதா

காரணம், ஜேர்மனியில் நடைபெற்றுவரும் வெளிநாட்டவர்களுக்கு எதிரான வன்செயல்கள், கொலைகள், தாக்குதல்கள், உடைமைகள் அழிப்புக்கள்தான்.

ஜேர்மன் அரசாங்கம், வெளிநாட்டவர்களுக்கு எதிரான வன்செயல்கள் அதிகரித்துக் கொண்டு வருவதனால் வெளிநாடுகளில் ஜேர்மனியின் மதிப்புக்குறைந்து வருவதை அவதானித்தது. இதனால் வெளிநாட்டவர்களுக்கு எதிரான கொள்கையுடைய தீவிர வலதுசாரிக் கட்சிகள், இயக்கங்களைத் தடை செய்து வருகின்றது. இதன் காரணமாக இவைகள் இரகசியமான முறைகளில் செயற்பட்டு வர முற்பட்டுள்ளன. இந்தச் செயற்பாடுகளில் ஒன்றாக வெளிநாட்டு சிறுமிகள் கடத்தப்பட்டு கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்படுவதும் இருக்கலாம் என்று சந்தேகிக்க இடமுண்டு.

ஆரம்பத்தில் ஜேர்மன் பணக்காரர்கள், தொழிலதிபர்களின் பிள்ளைகளைக் கடத்தி பணக்கோரிக்கை விட்டு பணம்

தொடர்ச்சி 15ம் பக்கம் ....



1991 இல் நடைபெற்ற விடுதலைமாலை நிகழ்ச்சியில் விடுதலை வீரனாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சிறீலங்காப் படைகள் களைத்துவிட்டன

## – நோர்வே பத்திரிகையாளர்

"சிறீலங்கா இராணுவத்தினர் பத்தாயிரம் பேரை தமது ஆயுதப் படையில் சேர்த்து படைப்பலத்தை ஒரு இலட்சத்துக்கும் அதிகமாக்கியும் கூட, தமிழ் கெரில்லா போராளிகளுக்கு எதிரான முழு அளவிலான ஒரு இறுதித் தாக்குதலை இராணுவத்தினர் மேற்கொள்ள முடியாதுள்ளனர் என்பதே பரவலான கருத்தாகும்".

இவ்வாறு, நோர்வேயிலிருந்து வெளிவரும் ARBEIDERBLADET (ஆர்பெய்டர்பிளாட்) தினசரியில், NIDIA BILBASSY என்ற கட்டுரை ஆசிரியர்; "படைகள் களைத்துவிட்டன" எனும் தலைப்பில் எழுதியுள்ளார்.

இராணுவ உயரதிகாரிகளும் தற்போது அரசாங்கத்தினை விமர்சிக்கத் தொடங்கிவிட்டனர். "தேவைப்படும் படைப்பலத்தை விட, இரண்டு மடங்காகப் படைப்பலம் அதிகரிக்கப்படினும் அதுபற்றி நாம் சந்தோசப்படமுடியாது. 1985, 1986 ஆம் ஆண்டுகளில் இராணுவத்தில் சேர்வதற்கு நீண்ட வரிசைகளில் காத்து நின்றவர்களுடன் ஒப்பிடும்போது, தற்போது இராணுவத்தில் சேர்வதற்கு வருபவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே உள்ளது" என முன்னாள் சிறீலங்கா விமானப்படை வைஸ்மார்சல் கரி குணதிலக கருத்துத் தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்கள், தங்கள் உறவினர்கள் பிணமாகத் திரும்பி வருவதைப் பார்த்து சலித்துவிட்டனர். தற்போது இராணுவத்தில் புதிதாகச் சேர்க்கப்படுபவர்கள் எழுத வாசிக்கத் தெரியாதவர்களும், வயது குறைந்தவர்களும், பொருளாதார ரீதியில் கஸ்டப்பட்டவர்களுமே ஆகும். வேலையில்லாப் பிரச்சினையே இவர்கள் படையில் சேர்வதற்குக் காரணமாகும் எனக்கூறிய இவர், ஆகஸ்ட் மாத இறுதி வரை புதிதாக இராணுவத்தினால் ஆட்கள் சேர்க்கப்பட்டதினை 'வீதிகளில் இருந்து ஆட்கள் திரட்டப்படுவதுபோல் இருப்பதாக' வர்ணித்துள்ளார்.

இராணுவ வட்டாரங்களின் கணிப்பின்படி, 1983 இல் போர் ஆரம்பித்ததிலிருந்து இன்று வரை, 7000 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் பல ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். சில வாரங்களுக்கு முன்னர் சிறீலங்காவின் கிழக்குப் பகுதியில் இராணுவ முகாம் (மண்கிண்டி) ஒன்று விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்டது. இத் தாக்குதலில் 40 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 5.2 மில்லியன் குரோனர்களுக்கும் அதிக பெறுமதியான ஆயுத தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றிச் சென்றுள்ளனர். ஆகஸ்ட் 27 ம் நாள் யாழ்ப்பாணத்தில் நடந்த இரண்டு வேறுபட்ட சம்பவங்களில், கடற்படையின் நான்கு பீரங்கிப் படகுகள் தகர்ப்பட்டு 8 கடற்படையினரும் கொல்லப்பட்டனர். இதன்மூலம் தற்போது போர் கடற்பரப்பிற்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

ஆயுதப் படையினர் தொடர்ந்தும் சண்டையில் ஈடுபடுவதற்கான மனத்திடம் இல்லாதவர்களாகவும், அதேவேளை போதிய பயிற்சி அற்றவர்களாகவும், இராணுவ உயர் அதிகாரிகள் மீது நம்பிக்கை இழந்தவர்களாகவும் உள்ளனர் என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் மேஜர் ஜெனரல் கொப்பேக்கடுவவும், ஏனைய 8 இராணுவ உயர் அதிகாரிகளும் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டதன்பின், இராணுவத்தினரின் மனத்திடம் மிகவும் குறைந்துவிட்டது. இச்சம்பவத்துக்குப் பின் இராணுவத்தினர் எந்தவொரு பாரிய அளவிலான தாக்குதல்களையும் மேற்கொள்ளவில்லை. மாறாக புலிகளின் தாக்குதலில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் தந்திரத்தையே கையாளுகின்றனர்.

பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ உயர் அதிகாரி ஒருவர் IPS க்குக் கூறுகையில் -
"நாம் புலிகளுக்கு எதிரான ஒரு பாரிய அளவிலான தாக்குதலை நடாத்தவோ, அல்லது புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசங்களைக் கைப்பற்றவோ முடியாமல் இருக்கின்றோம். பதிலாக, தெற்கில் இருக்கும் மக்களின் தாக்கங்களைக் குறைப்பதற்காக புலிகளின் ஒவ்வொரு தாக்குதலுக்கும் பதிலாக யாழ்ப்பாணத்தில் விமானக்குண்டு வீச்சுக்களை மேற்கொள்கிறோம். ஒட்டுமொத்தமாக பழிவாங்கும் நோக்கிலேயே இது செய்யப்படுகின்றது எனக்கூறினார்.

பல ஆய்வாளர்களின் கருத்துப்படி சிறீலங்கா ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா இராணுவத் தீர்வையே தீர்வாக வைத்துள்ளார். அண்மைக் காலங்களில் அவர் 'நாட்டில் இனப்பிரச்சினை இல்லையென்றும், இருக்கும் பிரச்சினை ஒரு பயங்கரவாதப் பிரச்சினையே ' என்றும் கூறியது இதனையே தெளிவாக்குகின்றது.

நன்றி:
-NADA BILBASSY, IPS
ARBEIDERBLADET 10/9/1993.

# மூன்சன் ஜேர்மன் மக்களை கவர்ந்த தமிழ்ப் பேரணி

தமிழீழத்தில் நடக்கும் தமிழின அழிப்புக்கும், தமிழ்மண் பறிப்புக்கும் எதிராக சிங்கள அரசாங்கத்தினது அராஜகத்தையும், மனித உரிமை மீறல்களையும் கண்டித்து உலகத் தமிழர் இயக்கத்தின், தென் மாநிலரீதியாக மூன்சன் நகரில் 4.8.93 நடந்த பேரணியில் தென்மாநிலத்தில் இருந்து பெருந்திரளான தமிழீழ மக்கள் கலந்து கொண்டனர்.

சிங்கள அரசாங்கமே!
தமிழீழ மக்கள் மீதான குண்டு வீச்சை நிறுத்து, மனித உரிமை மீறல்களை நிறுத்து, பொருளாதாரத் தடையை நீக்கு போன்ற சுலோகங்களை ஜேர்மன் மொழியிலும், தமிழ் மொழியிலும் மாறி மாறிக் கோசமிட்டனர். ஜேர்மன் மக்கள் கூட்டம் நிறைந்த சாலையின் ஊடாக நடந்த இந்தப் பேரணியில் ஜேர்மன் மக்கள் சுலோகங்களைப் பார்வையிட்டு, பேரணியின் முன்னணியில் வந்து கொண்டு இருந்தவர்களை உற்சாகப்படுத்தி பேரணியை வரவேற்றனர்.

பேரணி, காலை 10 மணிக்கு தமிழீழ மண்மீட்புப் போரில் உயிர் நீத்த போராளிகளையும் பொதுமக்களையும் மனதில் நிறுத்தி, இரண்டு நிமிட மௌனத்தால் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தியபின் ஆரம்பமானது.



பேரணியின் இறுதியில் உலகத் தமிழர் இயக்கத்தின் தென்மாநிலப் பொறுப்பாளர் பேசுகையில், சிறீலங்கா அரசாங்கத்திற்கு உலக நாடுகள் உதவ வேண்டாம் என்றும், புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்கள் நாம் ஒருமித்து பங்களிப்பதன் மூலம் தான், விடுதலைப் புலிகளின் கரங்களைப் பலப்படுத்த முடியுமென்றும், ஒருமித்த பங்களிப்பினைச் செய்வதன் மூலம் ஏவுகணைகளாக மாறும் கரும்புலிகளின் இழப்புக்களைத் தவிர்க்கலாம் என்றும் கூறினார். உலகத் தமிழர் இயக்கத் தலைவர் ஜேர்மன் மொழியில் ஆற்றிய நீண்ட சொற்பொழிவு ஜேர்மன் மக்களை திரண்டு நின்று கேட்கும் அளவிற்குக் கவர்ந்தது இப்பேரணியின் சிறப்பம்சமாகும். ■

## நேர்மையுடன்....

அடிப்படையில் நீங்கள் உலக அனுபவத்திலிருந்து நிறையக் கற்றுக்கொள்ள முயல வேண்டும். அனுபவம் மூலமாகவே நீங்கள் நிறைந்த அறிவைப் பெற்றுக் கொள்ளலாம்.

போராளிகள் நீதியாளர்களாகவும், சட்டவாளர்களாகவும் பொறுப்பை ஏற்றால் தமது பிரச்சினையை நேர்மையாக அணுகி, சரியான முறையில் நீதி வழங்குவார்கள் என எமது மக்கள் எதிர்பார்க்கிறார்கள். போராளிகள் ஒரு உன்னத குறிக்கோளுக்காக தமது உயிரையும் துறக்கத் தயாராக உள்ள இலட்சியவாதிகள் என்பதை எமது மக்கள் அறிவார்கள். எனவே போராளிகளாகிய நீங்கள் நீதி நிர்வாகத்தைப் பொறுப்பேற்கும்பொழுது மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் நீங்கள் நேர்மையுடனும் பொறுப்புணர்வுடனும் செயலாற்றுவீர்கள் என நம்புகிறேன்.

மக்களின் நாளாந்தப் பிரச்சினைகள், மனித உறவுப் பிரச்சினைகள், முரண்பாடுகள் ஆகியன உங்களுக்கு சிறிய பிரச்சினைகள் போன்று அர்த்தமற்றதாகத் தெரியும். ஆனால், மக்களுக்கு அவர்களது பிரச்சினைகள் பூதாகரமாகத் தென்படும். ஆகவே மக்களின் உணர்வுகளைப் புரிந்து அவர்களின் முரண்பாடுகளைக் களைந்து அவர்களுக்கு நீதி வழங்குவதை உங்கள் கடமையாகக் கொள்ளவேண்டும். நேர்மையாகவும், உண்மையாகவும் செயற்படுவதில் பல சிக்கல்கள் இருக்கத்தான் செய்யும். சில சமயங்களில் விமர்சனங்களுக்கும், சர்ச்சைகளுக்கும் ஆளாகவேண்டியும் ஏற்படலாம். ஆனால், எப்பொழுதும் நேர்மை தவறாது, சத்தியத்தின் வழியில் நீங்களும் உங்களது கடமையைச் செய்ய வேண்டும். அதற்கான உறுதியும், துணிவும் உங்களிடம் இருக்க வேண்டும்" என்றார்.

இந்த நிகழ்வில் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன், அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் திரு. பரா, காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன், அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, நிதர்சனம் பொறுப்பாளர் திரு. ஜவான் ஆகியோரும் மற்றும் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். ■

## நீண்ட நாள் ....

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டார். அதேவேளை 'செயற்பாட்டுத் தலைமையகம்' (OPERATION HEAD QUARTERS) பாதுகாப்பு அமைச்சின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன், முப்படைத்தளபதிகளும், பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் அதிரடிப்படை அதிபரும், பொலிஸ் உளவுப் படை அதிபரும் அடங்கிய குழுவாக இந்த செயற்பாட்டுத் தலைமையகம் இயங்கவுள்ளது. இந்த அமைப்பின் உருவாக்கல் மூலம் இராணுவ நடவடிக்கைகள் வேகம் பெறக்கூடியதாக இருக்கும் என கொழும்பு அவதானிகள் தெரிவிக்கின்றனர். இதற்கிடையே முரண்பாடுகளுடன் காணப்பட்ட கமில்டன் வனசிங்காவும் சிசில் வைத்தியரத்னாவும் ஒன்றாகத் தென்தமிழத்திற்கு விஜயம் செய்து போர் நடவடிக்கைகளை ஆராய்ந்துள்ளனர்.

### இராணுவக் குவிப்பு

கப்பல்கள் மூலம் திருகோணமலை இறங்கு துறையிலிருந்து பெருமளவிலான இராணுவத்தினர் தீவுப்பகுதிகளில் கொண்டு வந்து குவிக்கப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதேவேளை இம்முறை நீண்ட கால யுத்தம் ஒன்றை எதிர்நோக்க வேண்டிவரும் எனக்கருதும் சிறீலங்கா இராணுவம் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு முன்பே பத்தாயிரம் இராணுவத்தினரை திரட்டும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுவருகிறது. மாணவர்களில் இருந்தும் இராணுவத்திற்கு ஆட்களைத்திரட்டத் திட்டமிட்டுள்ள சிறீலங்கா இராணுவம் மாணவ அணியினருக்கு 2500 ரூபா ஊதியமும் வடக்குக் கிழக்கில் பணியாற்றின், 600 ரூபா ஊக்குவிப்புப் பணமும் அளிக்கப்படும் என அறிவித்திருப்பதுடன் இவர்கள் லெபனானுக்கு பயிற்சிக்கு அனுப்பப்படுவர் எனவும் ஆசை காட்டப்பட்டுள்ளது. இதற்கிடையே இராணுவத்தளபதி சிசில் வைத்தியரத்னா "போரில் வெற்றியீட்டுங்கள் உங்களுக்கு பதவி உயர்வுகள் காத்திருக்கின்றன" என இராணுவத்தினரிடையே உத்தரவாதங்கள் அளித்து, ஊக்கமளித்து வருகின்றார்.

### ஆயுதக் குவிப்பு

நீண்டநாள் யுத்தமொன்றை நடாத்துவதற்கு வசதியாக ஆயுதங்களை வேகமாக கொள்வனவு செய்யும் முயற்சிகளை சிறீலங்கா அரசு துரிதப்படுத்திவருகிறது. சீனாவிடமிருந்து ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை, இரண்டொரு வாரத்துள் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளில் சிறீலங்கா அரசு ஈடுபட்டுள்ளது. அதேவேளை விமானப்படைக்கு ஆட்களையும் சரக்குகளையும் ஏற்றிச் செல்லும் Y8 விமானங்கள் இரண்டை குத்தகை அடிப்படையில் பெறமுயற்சிக்கும் சிறீலங்கா அரசு, பிறிதொரு சரக்கு விமானமொன்றை குத்தகைக்குப் பெற்றுள்ளது. சிறீலங்காக் கடற்படையின் பலத்தைப் பெருக்கக் கூடியவகையில் பிரான்ஸ் மெரைன்ஸ் நிறுவனத்துடனிணைந்து டொக்யாட் நிறுவனம் 40 கோடி ரூபா செலவில் 4 அதிவேகப்படகுகளை தீவிரமாக நிர்மாணித்து வருகின்றது. ■

## தமிழ் மாணவர்...

மதங்கள் கடந்த நிலையில் பிரார்த்தனை நடைபெற்றது. கத்தோலிக்க ஆத்மீகப் பணியகம் கிறிஸ்தவ ஆராதனைகளையும், திரு. புஸ்பராஜா அவர்கள் இந்து தேவார தோத்திரங்களை பாடி பிரார்த்தனையும் நடத்தினார்கள். வண. பிதா ஜெயசேகரம் அவர்கள் அங்கு உரையாற்றுகையில், "வன்முறையை நோக்கி உலகம் போய்க்கொண்டிருக்கிறது. மனித நேயம் வளர்க்கப்பட வேண்டும்" என்றார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த வண. பிதா. மிக்கேல் செல்வராசா அவர்கள் உரையாற்றுகையில், "பணம் ஒரு மதிப்பீட்டுக் காகிதம். அதுவே எல்லாம் என்ற மேலைத் தேய மனப்பான்மையே வன்செயலுக்குக் காரணம்" என்றார்.

கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் தனது இரங்கலுரையில், "இதனை இயற்கை மரணம் என்று எம்மால் ஏற்கமுடியவில்லை. இந்த இழப்பை எண்ணி எமது இதயத்துக்குள் சூறாவளிவீசுகின்றது. துயர வெள்ளம் பெருக்கெடுக்கின்றது. உள்ளம் பூகம்பமாக வெடிக்கின்றது. உடல் அதனை எண்ணி நடுங்குகின்றது. இயற்கை அத்தனை கொடுமைகளையும் தாங்கி தடுமாறும் துயரம் இன்றைய துயரம்" என்றார். மாணவர் அமைப்பின் பிரதிநிதிகள் ஜேர்மனிய மொழியிலும் தமிழ் மொழியிலும் உரையாற்றினர்.

தேவாலயத்தில் இருந்து சேமக்காலையைச் சென்றடைந்த ஊர்வலத்தினர் அங்கிருந்த சுஜிதாவின் பூதவுடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர். அங்கு உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மன் கிளைப் பொறுப்பாளர், "எமது இனத்தின் சிறந்த கலைஞனை வன்செயலுக்குப் பறிகொடுத்து விட்டோம். இது மிகவும் வேதனையானது" என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் திரு. லோரன்ஸ் திலகர் அவர்கள் பேசுகையில், "இந்த சம்பவம் தனித் தமிழ் நாட்டில் தமிழீழத்தில்தான் தமிழருக்குப் பாதுகாப்பு உண்டென்பதை வெளிப்படுத்துகிறது. சுஜிதா தனி மனிதர் இல்லையென்பதை இந்த ஊர்வலம் எடுத்துக் காட்டுகிறது. அவர் தமிழீழத்தின் ஒரு அங்கம்" என்றார். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிகழ்வும் நினைவும்

— திலீபன் —

## திலீபன் - சில நினைவுத்துளிகள்

**26-09-1993.** இது லெப். கேணல் திலீபனின் ஆறாவது ஆண்டு நினைவு தினம். யாழ். கோட்டை எமது கைகளில் வீழ்ந்த மூன்றாவது ஆண்டு நிறைவு தினம்.

**07-09-1987** அன்று யாழ். கோட்டையின் முன்பாக, இந்திய இராணுவத்தை வெளியேறவிடாது மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டபோது, மக்கள் மத்தியில் உரையாற்றிய திலீபன், "அந்நிய அடக்குமுறையின் சின்னமாக விளங்கும் கோட்டை, என்று எமது 'கைகளில் வருகின்றதோ அன்று தான் எமது விடுதலையின் ஆரம்பம்" என்று குறிப்பிட்டிருந்தான்.

திலீபன் மறைந்து மூன்று ஆண்டுகளின் பின், திலீபன் மறைந்த அதே தினத்தில் கோட்டை எமது கைகளில் வீழ்ச்சியடைந்தமை, திலீபன் விடுதலை மீது கொண்டிருந்த ஆழ்ந்த பற்றினை - போராட்டம் மீது கொண்டிருந்த அசையாத நம்பிக்கையினை உறுதி செய்வதாக அமைந்துவிட்டது.

போராட்டம் நெருக்கடிக்குள்ளாகும் போது, அந் நெருக்கடியினை முறியடித்து போராட்டத்தினை முன்னோக்கித் தள்ளவேண்டும் என்பதில், திலீபன் மிகுந்த அக்கறை கொண்டிருந்தவன். போராட்டத்திற்கு எதிராகப் போடப்படும் எவ்வித அழுத்தங்களையும் தடைகளையும் தகர்த்தெறிய வேண்டும் என்பதில் உறுதியோடு இருந்தவன்.

1987 இல் 'ஒப்பரேசன் லிபரேசன்' எனும் பெயரில் வடமராட்சியில் சிறீலங்காப் படையினர் வெறியாட்டம் நடத்தி முடித்து வடமராட்சியினைக் கைப்பற்றியிருந்த தருணத்தில், ஒரு நாள் நான் திலீபனுடன் உரையாடிக்கொண்டிருந்தேன். அரச படைகளின் அட்டூழியத்தினால் அவன் மிகவும் கொதிப்படைந்திருந்தான். "வாகனங்களில் வெடிமருந்துகளை நிரப்பி, வடமராட்சியில் நிலைகொண்டுள்ள சிறீலங்கா இராணுவத்தின் முகாம்களைத் தற்கொலைத் தாக்குதலின் மூலம் தகர்த்தெறிய வேண்டும்; அத்தகைய சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்குமானால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன்" என அப்போது திலீபன் என்னிடம் தெரிவித்தான். அவன் இதைத் தெரிவித்தபோது பாரதியாரின் 'அக்கினிக் குஞ்சு ஒன்று கண்டேன்.......' எனும் வரிகளே எனக்கு நினைவுக்கு வந்தது. இராணுவ அடக்குமுறை மூலம் எமது போராட்டத்தைச் சிதைக்க எதிரி முனைந்தபோது, அதற்கு இராணுவ ரீதியில் பதிலடி கொடுத்து போராட்டத்தினை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த வேண்டும் என்பதில் திலீபன் கொண்டிருந்த திடத்தினையும் இது எனக்கு வெளிப்படுத்தியது. திலீபனின் இந்த ஆசையினை அவனால் நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. ஆனால், அவனது இலக்கு 05-07-1987 அன்று நெல்லியடி இராணுவ முகாம் மீது மில்லர் தொடுத்த தாக்குதலுடன் நிறைவேற ஆரம்பமாகியது.

நெல்லியடியில் நடாத்தப்பட்ட பதிலடியின் பின்னர், இந்தியா தனது கால்களை எமது விடயத்தில் சற்று ஆழப்பதிக்க, அது இலங்கை -இந்திய ஒப்பந்தத்தினைத் தோற்றுவித்தது.

தமிழீழ மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய முடியாத இலங்கை -இந்திய ஒப்பந்தம், போராட்டத்திற்குத் தடையாக வந்தபோது, இவ்வொப்பந்தத்தினையும் கடந்து போராட்டம் முன்னோக்கித் தள்ளப்பட வேண்டும் என்பதில் திலீபன் மிகுந்த உறுதியுடன் இருந்தான். ஒப்பந்தத்துடன் இணைந்து செல்ல வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டமை தொடர்பாக, அவன் மிகுந்த மனவேதனை அடைந்திருந்தான். ஒப்பந்தத்தின் பின் போராட்டத்தைச் சிதைப்பதற்கான நடவடிக்கைகள், இந்தியத் தரப்பாலும் சிறீலங்காத் தரப்பாலும் படிப்படியாக மேற்கொள்ளப்படும் என்று அவன் எதிர்பார்த்திருந்தான். அவன் எதிர்பார்த்திருந்தது போலவே நிகழ்வுகள் நடைபெற ஆரம்பித்தன.

ஆயுத ஒப்படைப்புக்குப் பின்னர், நிராயுதபாணிகளாக இருந்த விடுதலைப் புலிகள், இந்திய இராணுவத்தின் துணையுடன் ஏனைய குழுக்களைச் சேர்ந்தவர்களால் கொலை செய்யப்பட்டனர். இந்திய இராணுவப் பாதுகாப்புடன் தமது முகாம்களை அமைத்த இந்தக்குழுவினைச் சேர்ந்தவர்கள் மக்களைத் தொல்லைப்படுத்தத் தொடங்கினர். புனரமைப்பு, புனர்வாழ்வு என்ற போர்வையில் மீண்டும் சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பமாகின. 'இடைக்கால அரசு' அமைக்கப்படும் என இந்தியத் தரப்பால் வழங்கப்பட்ட உறுதிமொழி, 'இடைக்கால நிர்வாகம்' எனவும் பின்னர் 'இடைக்கால ஆலோசனைச் சபை' அமைக்கப்படும் எனவும் உருமாறத் தொடங்கியது. இந்தியத் தரப்பால் வழங்கப்பட்ட பல உறுதி மொழிகளும் மீறப்பட்டன. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட, சிறீலங்காத் தரப்பால் நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்களை நிறைவேற்றுவதற்கு உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இப்படியாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை அரைகுறையாகச் சிதைப்பதற்கு இந்தியத் தரப்பாலும், சிறீலங்காத் தரப்பாலும் இலங்கை -இந்திய ஒப்பந்தம் பயன்படுத்தப்பட ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் இவை திலீபனுக்கு ஆச்சரியத்தினையோ, பெரும் அதிர்ச்சியினையோ ஏற்படுத்தவில்லை. ஏனெனில் நடந்தவை அவன் எதிர்பார்த்தவையே. ஆனால், போராட்டம் சிதைக்கப்படுவதனை அவனால் தாங்கமுடியவில்லை. இந்த நிகழ்வுகளால் அவன் மிகவும் கொதிப்படைந்திருந்தான். போராட்டத்தைப் பாதுகாத்து அடுத்த கட்டத்திற்கு நகர்த்த வேண்டும் என்பதற்காக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று நடாத்தப்பட வேண்டியதன் அவசியத்தினையும், அதனைத் தானே ஆரம்பிக்க வேண்டும் எனவும் தலைமைப்பீடத்திடம் வலியுறுத்தினான்.

திலீபன் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தினை, நீர் கூட அருந்தாது மேற்கொள்ள ஆரம்பிக்கப் போகின்றான் எனத் தகவல் வந்தபோது, அவனுக்கு ஒரு செய்தி அனுப்பினேன். "இப்போராட்டத்தினூடாக இலங்கை -இந்திய ஒப்பந்தத்தினை அம்பலப்படுத்தி, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதற்கு மக்களை அணிதிரட்ட வேண்டும்; அதற்கு சிறிது காலம் தேவைப்படும். எனவே நீர் அருந்திக்கொண்டு உண்ணாவிரதத்தினை மேற்கொள்ளுவது குறித்துச் சிந்திக்கவும்" -இதுவே நான் அனுப்பிய செய்தியின் சாரம். உண்மையில் இவ்விடயத்தினை அவனோடு நேரடியாகக் கதைக்கவே விரும்பியிருந்தேன். ஆனால், அவன் அப்போது மிகவும் வேகத்துடன் தனது கடமைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தமையாலும் ஆறுதலாகக் கதைப்பதற்கு நேரமற்றவனாக இருந்தமையினாலும், நான் எனது பத்திரிகை வேலைகளில் மூழ்கியிருந்தமையினாலும் இவ்விடயம் தொடர்பாக திலீபனுடன் நேரடியாகக் கதைக்க முடியாமல் போய்விட்டது. ஆனால், நான் அனுப்பியிருந்த செய்திக்கு மறுநாள் அவனிடமிருந்து பதில் வந்தது. "நீர் அருந்தியவாறு உண்ணாவிரதப் போராட்டத்தினை மேற்கொள்வதில் எனக்கு உடன்பாடில்லை. நீர் அருந்திக்கொண்டு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டால், அது வழமையாக நடைபெறும் உண்ணாவிரதம் ஆகிவிடும். அது போராட்டத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்துவிடும்" -இதுவே அவன் எனக்கு அனுப்பிய பதிலின் சாராம்சம்.

**15-09-1987** அன்று திலீபனின் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமாகியது. இப்போராட்டத்தினை மக்கள் மயப்படுத்துவதில் நாம் எம்மால் முயன்ற வழிகளில் 'ஈழமுரசு' இன் ஊடாக ஈடுபட்டிருந்தோம். அவனது போராட்டம் ஒரு சில தினங்களில் மக்களைத் தட்டி எழுப்பியது. வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை என எங்கும் போராளிகள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர். மக்களும் பல்வேறு வடிவங்களில் போராட்டத்தில் குதித்தனர். தமிழீழம் எங்கும் திலீபனின் ஐந்து அம்சக்கோரிக்கைகள் மக்கள் குரலாக எழுந்தது.

**இவ் உண்ணாவிரதப் போராட்டம் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்த எழுச்சியினை பதிவு செய்வதற்காக, போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில், நானும் எனது சக நண்பர்களும் குடா நாட்டில் ஒரு சிறு சுற்றுப் பயணத்தினை மேற்கொண்டிருந்தோம். ஒரு இடத்தில் இந்திய இராணுவத்தினரை வீதியால் முன்னேறவிடாது, மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். இப்போராட்டத்தினைப் பெண்களே முன்னின்று நடத்தினர். இப்போராட்டத்தினால் எரிச்சலுற்ற இந்தியப் படைத் தளபதி**

***தொடர்ச்சி 12ம் பக்கம் ....***

## தமிழ் மக்களூ..

பறிக்கும் கும்பலொன்று இருந்தது. அப்படியானவர்கள்தான் சிறுமியர்களைக் கொலை செய்பவர்களாகவும் இருக்கலாம் என்று பொலிசார் சந்தேகப்பட்டார்கள்.

ஆனால், 1993 ஆம் ஆண்டு கோடை காலத்தில் தமிழீழச் சிறுமி செல்வி. சுஜிதாவுடன் சேர்த்து 19 சிறுமியர்களின் கொலைச் சம்பவங்கள் நடந்துள்ளன. இதில் 7 வெளிநாட்டுச் சிறுமியர் அடங்குகின்றனர். இது பற்றி ஒரு பொலிஸ் பேச்சாளர் இப்படிக் கூறுகிறார்: கிட்டத்தட்ட ஒரே வயதை அண்டிய நல்ல அழகான தோற்றம் கொண்ட வெளிநாட்டுச் சிறுமிகளைத் தான் இந்தக் கடத்தல், கற்பழிப்புக் கொலைகளுக்கு தேர்ந்தெடுக்கிறார்கள்" என்று. இதுவும் ஒரு புதிய சந்தேகத்தைத் தூண்டிவிடுகிறது.

லின்னிச் நகரில் வசித்த செல்வி. சுஜிதா புவனேஸ்வரன் 26. 08. 93 காலை 7. 30 மணிக்கு பாடசாலைக்குச் சென்றவள் மாலை வீடு திரும்பவில்லை. பெற்றோர் தேடினார்கள். பொலிசில் புகார் செய்தார்கள். பொலிசார் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடாமல் இருப்பதாகச் சந்தேகித்த பெற்றோர் சட்டத்தரணியை அணுகினார்கள். இதனையடுத்து பொலிசார் தீவிரமாகத் தேடத்தொடங்கினர். ஆனால் 7. 9. 93 அன்று கங்கெல்ற் (GANGELT) என்ற காட்டுப் பகுதியில் எரியுண்ட நிலையில் அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டது.

இந்த வேதனைமிக்க துயரம் தாங்காத சம்பவம் வெளிநாடுகளில் வாழும் அத்தனை தமிழீழ மக்களின் இதயங்களிலும் பதிந்து ஒரு முக்கிய உண்மையைப் புலப்படுத்திச் சென்றுள்ளது. அது, 'தமிழீழத்தைவிட்டு உயிர்ப் பாதுகாப்புக்காக வெளிநாடுகளுக்கு ஓடிவந்து வாழ்ந்துகொண்டிருக்கும் உங்களுக்கு இங்கும் பாதுகாப்பில்லை. இதனை நன்கு உணர்ந்து சிந்திப்பீர்களானால் உங்களுக்குப் பாதுகாப்பு இறைமை மிக்க தமிழீழம் தான் என்பது புலப்படும்' என்பதே.

வெளிநாடுகளில் தமிழீழ மக்கள் வாழ்ந்துகொண்டிருப்பது ஒரு தற்காலிகத் தங்குமிட வாழ்க்கை தான். நிரந்தர அமைதியான பாதுகாப்பான வாழ்க்கை இங்கு இல்லை. நாங்கள் எப்படித்தான் ஆடம்பர உல்லாச வாழ்க்கையை வாழ்ந்தாலும் அது போலியான நிம்மதியற்ற வாழ்க்கைதான். வேற்றுமொழிகலை பண்பாட்டில் நாங்கள் மூழ்கி அந்த வாழ்க்கையை வாழ முற்பட்டாலும் அந்நிய மண்ணில் நாங்கள் அந்நியர்கள்தான் என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு எடுத்துக்காட்டாகின்றது.

ஒரு தந்தை கொடுத்த முறைப்பாட்டை பொலிசார் பொருட்படுத்தாமல் அசட்டுத்தனமாக இருந்தார்களென்றால், அது எதனைக் குறிக்கின்றது? இவர்கள் வெளிநாட்டவர்கள்தானே என்ன நடந்தாலும் எங்களுக்கு என்ன என்ற எண்ணமா? அல்லது இப்படி எத்தனையோ நடக்கின்றது. இதில் இதுவும் ஒன்றுதானே என்ற அசட்டையா? எது எப்படித்தான் இருந்தாலும், ஜேர்மனி போன்ற நாடுகளில் வெளிநாட்டவர்களாகி எங்களுக்குப் பாதுகாப்புக் குறைந்துகொண்டு போவது புலப்படத் தொடங்கியுள்ளது. ■

**இரா. சோமா**

## தமிழ்நாட்டு ....

இந்தியா? இந்தியாவா? என்பது தான் இவர்களின் பிரதான கோசம். தொடர்ந்தும் இந்தி திணிக்கப்பட்டால், இந்தியாவிற்குள் தமிழ்நாடு இருக்கமாட்டாது என்பதுதான் இதன் பொருள்.

'இலட்சியப்பாதை' எனும் ஒரு வார இதழில் திரு. வை. கோபாலசாமி இப்படி எழுதுகிறார். " விரைவாக நடந்தேறி வரும் சம்பவங்கள் உலகிற்கு ஒரு விடயத்தைக் கூறுகின்றன, அதாவது 21ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவின் வரைபடம் புதிதாக வரையப்படும்..... "

பிரபல திரைப்பட நடிகர் சத்தியராஜ் 'தேவி' வார இதழ் மூலம் இப்படிச் சொல்கின்றார்.
" தொடர்ச்சியாக இந்தி திணிக்கப்பட்டால் தமிழ் நாட்டு மக்கள், சேர சோழ பாண்டிய அரசர் காலத்தில் தமிழர்கள் சுதந்திரமாக இருந்தகாலத்தை நினைத்துப்பார்க்க வேண்டியிருக்கும்".

இந்த இந்தி எதிர்ப்புப் பிரச்சாரம் தமிழ்நாட்டின் தென்பகுதி மாவட்டங்களிலேயே தீவிரமாக நடைபெறுகின்றன. திரு. வை. - கோபாலசாமியின் செல்வாக்கும் இந்தப் பகுதிகளிலேயே நிறைந்து காணப்படுகிறது.

காவிரி நீர்ப்பிரச்சினையாலும் இந்தி எதிர்ப்பு உணர்வாலும் தென் தமிழ்நாட்டுத் தமிழர்களிடையே தமிழ்த்தேசிய எழுச்சி புத்துயிர் பெற்று வருகின்றது.

இத் தமிழ்த்தேசிய எழுச்சிக்கு திறமையும், மக்கள் ஆதரவும் நிறைந்த திரு வை. கோபாலசாமி தலைமை கொடுக்கின்றார் என்ற செய்திபரவும் போதே, தமிழின் விரோதிகள் கலவரமடைந்தனர்.

திரு. வை. கோபாலசாமி பேசும் கூட்டங்களுக்கு இளைஞர்கள் பெருமளவில் வருகின்றனர். அவரது அனல் பறக்கும் பேச்சுக்கள் தமிழ்த் தேசியத்திற்கு புத்துணர்ச்சி ஊட்டும் வகையிலேயே அமைந்திருக்கின்றன. அதே வேளை திரு. வை. கோபாலசாமி தமிழீழ தேசியத்தின் நண்பனாகவும் இருந்து வருகின்றார் என்ற செய்தியும், தமிழின விரோதிகளுக்கு அச்சமூட்டியுள்ளது. இதனால் திரு. வை. கோபாலசாமியின் எழுச்சியை முறியடிக்க உள்ளேயும் வெளியேயும், சதியும் கழுத்தறுப்புகளும் நடைபெறுகின்றன.

இந்தச் சூழ்ச்சிகளை திரு. வை. கோபாலசாமி எப்படி எதிர்கொண்டு முறியடித்து வெற்றிபெறப் போகின்றார் என்பதே, உலகத் தமிழர்களின் எதிர்பார்ப்பாகும். ■



www.tamilarangam.net

# திலீபனின் தீர்க்கதரிசனம்!

"போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், சிங்களவர், இந்தியப் படையினர் இப்படியாக எமது ஆக்கிரமிப்பாளர்களின் பிடியில் இருந்து வரும் இந்தக் கோட்டையில் என்று புலிக்கொடி பறக்கின்றதோ அன்றுதான் எமது சுதந்திர விடிவின் ஆரம்பம்" என்ற தியாகி திலீபனின் பிரகடனம் இன்று நிதர்சனமாகிவிட்டது.

தியாகதீபம்
லெப். கேணல் திலீபனின்
ஆறாம் ஆண்டு நினைவு நாள்
26-09-93

திலீபன் கூறியவாறு யாழ். கோட்டை, அவன் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த அதே திகதியில் மூன்று ஆண்டுகளுக்குப் பின்னால் (26. 09. 1990) தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது.







யாழ். கோட்டையிலிருந்து ஆதிக்க வெறியர் விரட்டியடிக்கப்பட்டபின் இன்று கோட்டை முனியப்பர் ஆலயத்திற்கு தமிழ் மக்கள் தங்கள் வழிபாட்டுக்காகச் சென்று வருகின்றனர்.


T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943

U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

T.C.G
Post Fach 340251
51624 Gummersbach-34
Germany

W.T.C.C
HOFJECKLIN, 7416 RODELS
SWITZERLAND
Tel 077 - 816609

T.C.C
Via Mariano Stabile - 34
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
P.O.Box 694, Mulgrave North
Victoria 3170, Australia
Tel 03-457 6347 F 5608224


Printed by Observer Group Newspapers.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்